
செப்டம்பர் 2008 September | இதழ் 212 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION



Growing with the Community ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

a monthly information digest

18 வது ஆண்டில் th Year

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல் TAMILS' INFORMATION
ISSN 1206-0585

ஸ்தாபிதம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து — **From the Editor**

## கவன ஈர்ப்புகள்

தாயகத்தில் சிறீலங்கா அரசு நடத்தும் அராஜக நடவடிக்கைகள், தமிழினச் சுத்திகரிப்புத் தாக்குதல்கள், லட்சக்கணக்கான தமிழரை அவர்களின் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கும் குண்டு வீச்சுகளைக் கண்டிக்கும் வகையிலான பல்வேறு கவனயீர்ப்பு நடவடிக்கைகள் உலகெங்கும் நடைபெற்று வருகின்றது.

சர்வதேச நிறுவனங்களின் முன்றல்கள், நாடாளுமன்ற வளாகங்கள், அரசியல்வாதிகளின் அலுவலகங்கள், பொதுமக்கள் அதிகளவில் கூடும் இடங்கள் என்பவை இதற்காகத் தெரிந்தெடுக்கப்படும் இடங்களாக அமைந்து வருகின்றன.

கனடிய மண்ணில் ரொறன்ரோ பெருநகரிலேயே அதிகளவு தமிழர் வசிப்பதால், இங்கும் இவ்வாறான ஈர்ப்பு நிகழ்வுகள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

கடந்தாண்டின் இறுதியிலும் இவ்வருட ஆரம்பத்திலும் இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களில் திரண்ட எம்மவர் பல நூற்றுக்கணக்கானோரின் ஒப்பங்களுடன் கூடிய மகஜர்களைக் கையளித்தனர். சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவற்றைக் கனடிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து ஆவணப்படுத்தியுள்ளனர்.

இதனால் ஏற்பட்ட பலாபலன்கள் என்னவென்பது தெரியவரவில்லை.

சில மாதங்களுக்கு முன்னர் ரொறன்ரோவிலுள்ள சிறீலங்கா அரசின் துணைத்தூதர் அலுவலகத்தின் முன்னர் ஒரு கண்டன நிகழ்வு நடத்தப்பட்டது.

கடந்த யூலையில், 1983 இனவழிப்பின் 25வது ஆண்டு நினைவுகூறலையொட்டிய நடமாடும் கண்காட்சி நடைபெற்றது. வேற்றின மக்களுக்கு சிங்களப் பேரினவாதிகளை அடையாளம் காட்ட இது உதவியது.

இங்குள்ள பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், அங்காடிகள், சந்திகள், சந்தைகள் போன்ற இடங்களில் வித்தியாசமான கவனயீர்ப்பு நிகழ்வுகள் இப்போது நடத்தப்படுகின்றன. சிங்கள அரசின் கொலைவெறியினை அம்பலப்படுத்தும் ஒளிப்படங்கள் மற்றும் பதாதைகளுடன் மக்கள் நிற்கும் போது, முக்கியமான செய்தி வெளிக்கொணரப்படுகின்றது.

இந்நிகழ்வுகளைப் பலரும் வரவேற்கின்றனராயினும், பங்கேற்பவர் தொகை குறைவாகவே காணப்படுகிறது. அதேசமயம், 'இவ்வகை நிகழ்வுகள் போதாது; வாராந்தம் ஏதாவது நடத்தப்பட வேண்டும்' என்னும் குரலையும் கேட்க முடிகின்றது.

உணர்வுடனும் ஊக்கத்துடனும் ஒவ்வொருவரும் தத்தம் இருப்பிடப் பகுதிகளிலேயே கவனயீர்ப்பு நிகழ்வுகளை நடத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

கனடிய குட்டிப் பொதுத்தேர்தல் அடுத்த சில வாரங்களுக்குள் நடைபெறவுள்ளது. சகல கட்சியினரும் வாக்கு வேட்டையில் இறங்கியேயாக வேண்டும். இதனை, எமக்கான ஒரு வாய்ப்பாக நாம் கருத வேண்டும்.

சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில், ஜனநாயக வழிநின்று எங்கள் பிரச்சனைகளுக்கு விடை கேட்க அரிய தருணம் இது. ஒருமுகமாக் கூர்மையுடன் செயற்படுவோமா?

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல் TAMILS' INFORMATION
ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றொறன்ரோவிலுள்ள சொந்தப் பயண ஊர்திகளுக்கு இந்த மாதத்திலிருந்து புதிய வரி

**றொறன்ரோ மாநகர எல்லைக் குள்ளிருக்கும் சொந்தப் பயண ஊர்திகளுக்கான புதிய வரியொன்றினை றொறன்ரோ நகர சபை இந்த மாதம் (2008 செப்டம்பர்) முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது.**

**சொந்தப்பாவனைக்காக மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ள பயண ஊர்தி மற்றும் சிறுவணிக ஊர்தி ஒன்றுக்கான வருட வரி அறுபது டாலர்கள்.**

**மோட்டார் உந்துருளி மற்றும் மென்மோட்டார் உந்துருளி ஒன்றுக்கான வருடாந்த வரி முப்பது டாலர் களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

**ஒவ்வொருவரும் தங்களது ஊர்தி இலக்கத் தகடு அனுமதிக் கட்டணத்தைச் செலுத்தும் திகதியுடன் இணைந்ததாக மாநகர ஊர்திக்கான வரியையும் செலுத்த வேண்டும்.**

**அதாவது, இலக்கத் தகடு வரியினைப் புதுப்பிக்கச் செல்லும்போது, இந்தப் புதிய வரித் தொகையையும் செலுத்த வேண்டும்.**

**இந்த வரி மூலம் வரும் வருமானம் அனைத்தும் றொறன்ரோ மாநகரசபையையே சென்றடையும். இது மாகாண வரிக் கட்டணம் அல்ல.**

**மேலதிக விபரங்களை 416 338 4829 இலக்கத்தில் அல்லது** www.toronto.ca/taxes **இணையத்தளத்தில் பெறமுடியும்.**

# கனடாவில் குட்டிப் பொதுத் தேர்தல் மீண்டும் ஒரு சிறுபான்மை அரசுக்காக!

## Harper's choice - A quick poll

இதனை எழுதும்போது இருந்த கனடிய மைய அரசியல் நிலைவரம், எதிர்பார்த்தவாறு இப்போது நிறைவேறியிருக்கலாம். குட்டிப் பொதுத்தேர்தலுக்கான திகதியும் ஓரளவுக்குத் தெரிய வந்திருக்கலாம்.

இந்த மாதம் 6ஆம் திகதிக்கும் 8ஆம் திகதிக்குமிடையில் கனடிய நாடாளுமன்றம் கலைக்கப்படுமென்பது கடந்த மாத இறுதியில் உறுதியானது. இதற்கேற்ற வகையில், கனடிய கவர்னர் ஜெனரலின் வெளிநாட்டுப் பயணம் ரத்தாக்கப்பட்டது. பத்து மாகாணங்களின் லெப்டினன்ட் கவர்னர்களும் நாட்டுக்குள் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஸ்டீபன் ஹாப்பரின் சிறுபான்மை அரசு, எதிர்க்கட்சிகளின் பலமின்மையைத் தனது பலமாக்கி இரண்டரை ஆண்டுகளை ஒருவாறு ஓட்டிவிட்டது. ஆனால், எதிர்க்கட்சிகள் பூரணமாக ஒத்துழைப்பதில்லை என்று காரணம் காட்டி குட்டிப் பொதுத் தேர்தலை நடத்த பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வந்தன.

கன்டர்வேடிவ் அரசின் செல்வாக்குச் சரிந்து வருவதாலும், லிபரல் கட்சியின் மக்கள் ஆதரவு சற்றுக் கூடுதலாகி வருவதாலும் தேர்தலைக் காலந்தாழ்த்தி நடத்துவதால் ஏற்படும் ஆபத்தை ஹாப்பர் அறிந்திருந்தார்.

அதுமட்டுமன்றி, நவம்பர் 4ஆம் திகதி நடைபெறும் அமெரிக்கத் தேர்தலில் ஒபாமா வெற்றி பெறுவாரானால், அது தமக்குப் பாதகமாகவும் லிபரலுக்குச் சாதகமாகவும் அமையுமெனவும் ஹாப்பரிடம் அச்சம் உள்ளது.

இந்த மாதம் எட்டாம் திகதி நடைபெறவுள்ள மூன்று இடைத்தேர்தல்களில், கூடிய ஆசனங்களை லிபரல் கட்சி பெறக்கூடிய வாய்ப்புண்டு. இதுவும் எதிர்காலத்தில் தமக்குப் பாதகமாக அமையுமென்பது ஹாப்பருக்குத் தெரியும்.

இந்தக் காரணங்களால், இந்த மாதம் எட்டாம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பது; நவம்பர் மாதத்துக்கு முன்னர் குட்டிப் பொதுத்தேர்தலை நடத்துவது என்ற முடிவுக்கு வந்துவிட்டார் கன்சர்வேடிவ் தலைவரும் பிரதமருமான ஹாப்பர்.

அதற்கு முன்னதாக எல்லாம் ஜனநாயக முறையாகவே நடப்பதான தோற்றப்பாட்டினை உருவகிக்க வேண்டிய தேவையும் அவருக்குண்டு. இதனால் மூன்று பிரதான கட்சிகளின் தலைவர்களுடனும் தனித்தனியாகப் பேசவென அழைப்பு விடுத்தார்.

என். டி. பி, புளொக் கியுபெக்கா கட்சிகளின் தலைவர்கள் ஆகஸ்ட் கடைசி நாட்களில் சந்தித்துப் பேசினர். இவ்விரு தலைவர் களும் உண்மையாக இப்போதொரு தேர்தல் நடப்பதை விரும்பவில்லை. தமது கட்சிகள் தற்போதுள்ள ஆசனங்களின் தொகையை மீண்டும் மைப்பற்றுமென்பதில் இவர்களுக்கு நம்பக்கையில்லை.

ஆனால் பிரதமருடனான சந்திப்பின் பின்னர், "தேர்தலை உடனடியாக நடத்தவே ஹாப்பர் விரும்புகின்றார்" என்று இவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்த மாதம் ஒன்பதாம் திகதிக்குப் பின்னரே சந்திக்க முடியுமென முன்னர் தெரிவித்திருந்த லிபரல் தலைவர் ஸ்ரெபனி டியோன், ஒருவாறு நேரத்தை ஒதுக்கி இந்த மாதம் முதலாம் திகதி பிரதமரைச் சந்தித்தார்.

"உடனடித் தேர்தல் தவிர்க்க முடியாதது. யார் வென்றாலும் மீண்டும் சிறுபான்மை அரசே ஆட்சிக்கு வருமென" ஹாப்பர் பகிரங்கமாகக் கூறியுள்ளாராயினும், புதிய சிறுபான்மை அரசும் தம்முடையதாகவே இருக்குமென அவர் நம்புகின்றார். இதன் வெளிப்பாடாகவே தேர்தலை நோக்கிய அவரது காய் நகர்த்தல்களும் இடம்பெறுகின்றன.

இவரது கன்சர்வேடிவ் கட்சி அடுத்த பொதுத் தேர்தலுக்கான நாளாக 2009 அக்டோபர் 19ஆம் திகதியைத் தீர்மானித்திருந்தது. அதுவரை பொறுத்திருக்க விரும்பாத ஸ்டீபன் ஹாப்பர் இந்த வருட அக்டோபர் 14க்கும் 21க்குமிடைப்பட்ட திகதியொன்றை இலக்கு வைத்துள்ளார்.

மக்களின் வரிப்பணம் இருக்கும் வரை, பிரதமர்களால் என்னதான் செய்ய முடியாது?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். சண்முகராஜா
RN, Dip. Nursing Ed.

# சர்க்கரையோடு எச்சரிக்கை தேவை-4

சர்க்கரைநோய் கண்டுவிட்டால் அக்கறையாய் இல்லையெனில்
சிக்கல்களால் நல்வாழ்வு சீரழியும் - எக்குறையும்
வாராது சர்க்கரையைக் கட்டுக்குள் வைத்துவிடில்
தீராத நோயோடிப் போம்.

முன்னைய இதழ்களில் தரப்பட்ட நீரிழிவு நோய் பற்றிய தகவல்களின் தொடர்ச்சியாக இவ்விதழில் நீரிழிவு நோயாளிகளில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்கிறேன். இச்சிக்கல்கள் அனேகமாக வருமுன் காக்கப்படக்கூடியன என்பதனால் நீரிழிவு நோயாளிகள் இச்சிக்கல்கள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்வது மிக இன்றியமையாதது.

நீரிழிவு நோயாளரில் ஏற்படக்கூடிய சிக்கல்களை கூர்ப்பான சிக்கல்கள் (acute complications) நாட்பட்ட சிக்கல்கள் (chronic complications) என இரு பிரிவுகளாகக் கொள்ளலாம். கூர்ப்பான சிக்கல்கள் மேலும் உயர்குருதிச் சர்க்கரை நிலை தாழ்குருதிச் சர்க்கரை நிலை என இரு வகைப்படும்.

**உயர்குருதிச் சர்க்கரை நிலை (hyperglycemia)**

நீரிழிவு நோயாளரில் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு வரையறை கடந்து மிக அதிகரித்துப்போவதால் இந்நிலை ஏற்படுகிறது. நாளாந்தம் ஏற்றப்படும் இன்சுலின் மருந்தை ஏற்றிக் கொள்ளத் தவறுதல் அல்லது மருந்துக் குளிசைகளை உட்கொள்ளத் தவறுதல், உடற்பாதிப்பு, தொற்றுக்கள் போன்ற நோய்கள், உடல் உள நெருக்கடி, உடற்பயிற்சி, உணவு மருந்து ஆகியவை சமச்சீர் இல்லாது போதல் போன்ற காரணங்களால் இச்சிக்கல் ஏற்படலாம்.

**இச்சிக்கலின் குணங்குறிகள்**

ஆரம்ப நிலையில் அதிக தாகம், அதிகமாக சிறுநீர் கழிதல், பலவீனம் ஆகியவை காணப்படும். இந்நிலை தொடர குமட்டல் வாந்தி கூர்மையான வயிற்றுவலி போன்ற குணங்குறிகள் ஏற்படும். தொடர்ந்து குருதியில் குளுக்கோசின் அளவு மிக அதிகரித்துப்போகும் நிலையில் உடற்கலங்கள் தமக்குத் தேவைப்படும் சக்திக்காக உடலிலுள்ள கொழுப்பு புரதம் ஆகியவற்றைப் பயன்படுத்த விளையும்போது கீற்றோன் (ketones) எனப்படும் அமிலப் பொருள்கள் குருதியில் சேர்ந்து கொள்ள குருதி அமிலத்தன்மை அடைந்து diabetic ketoacidosis எனப்படும் ஆபத்தானதொரு நிலை ஏற்படுகிறது. இந்நிலையில் மேற்குறிப்பிட்ட குணங்குறிகளுடன் குருதியில் குளுக்கோசின் அளவு மிக உச்சமாக அதிகரித்துக்காணப்படும். இதற்கு உடனடியாக சரியான சிகிச்சை அளிக்கப்படாது போனால் குருதியமுக்கம் வீழ்ச்சியடைதல். கோமா நிலை, இறப்பு போன்ற ஆபத்தான விளைவுகள் ஏற்படலாம்.
இச்சந்தர்ப்பத்தில் நோயாளியைத் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து நாளத்தினூடாக தாதுப்புக்கள், திரவம், இன்சுலின் ஆகியவை செலுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவது அவசியம். அத்துடன் இச்சிக்கல்களுக்கு தோற்றுவாயான தொற்று போன்ற நோய்நிலைகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படுவதும் அவசியம்.

**நோயாளி செய்ய வேண்டியது என்ன?**

இச்சிக்கல் நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு முன்னைய கட்டுரைகளில் கூறப்பட்டது போல நீரிழிவு நோயாளர் மருத்துவச் சிகிச்சை முறையுடன் தகுந்த உணவு உடற் பயிற்சி ஆகியவற்றை ஒழுங்காகக் கடைப்பிடிப்பதுடன் கிரமமாகக் குருதிப்பரிசோதனை செய்து குருதிக் குளுக்கோசின் அளவு கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றதா என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். அத்துடன் இச்சிக்கலை ஏற்படுத்தும் மேற்கூறப்பட்ட காரணிகளை இயன்ற அளவு தவிர்க்க முயற்சி செய்ய வேண்டும். ஆரம்ப நிலைக்கான குணங்குறிகள் தோன்றும்போது நோயாளி தனது குருதியிலுள்ள குளுக்கோசின் அளவைப் பரிசோதனை செய்து அதன் அளவு 11 mmol/L க்கு அதிகமாகக் காணப்பட்டால் மருத்துவரின் ஆலோசனையைப் பெற்று மருந்துச் சிகிச்சை, உணவு, உடற்பயிற்சி ஆகியவற்றில் மாற்றம் செய்ய வேண்டியது அவசியம். குருதிக் குளுக்கோசின் அளவு உச்சமாக அதிகரித்துக் காணப்பட்டால் (கோமா போன்ற மயக்க நிலை ஏற்படக்கூடுமாதலால்) இன்னொருவரின் உதவியுடன் உடனே அவசர மருத்துவ சிகிச்சைப் பிரிவுக்கு விரைந்து சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

**தாழ்குருதிச் சர்க்கரை நிலை (hypoglycaemia)**

4 mmol/L என்ற அளவுக்குகீழ் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு குறைந்து போவதால் இச்சிக்கல் நிலை ஏற்படுகிறது. இச்சிக்கல் ஏற்படுவதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம். ஏற்றப்படும் இன்சுலினின் அளவு அல்லது உட்கொள்ளும் நீரிழிவு மாத்திரையின் அளவு அதிகமாகிப்போதல், இன்சுலின் அல்லது மாத்திரை எடுத்தபின்பு உணவு உட்கொள்ளத் தவறுதல் அல்லது வழமையை விட குறைவாக உணவு உட்கொள்ளுதல், வழமைக்கு மாறான அதிக உடற்பயிற்சி, மதுபானம் அருந்துவதால் ஏற்படும் தாக்கம் ஆகிய காரணங்களால் இச்சிக்கல் ஏற்படலாம்.

**இச்சிக்கலுக்கான குணங்குறிகள்**

இச்சிக்கல் ஏற்படும்போது உடல் நடுக்கம், தலைச்சுற்று, மாறாட்டம், களைப்பு, பலவீனம், அதிக வியர்வை, இதயத்துடிப்பு அதிகரித்தல், உதடு நாக்கு ஆகியவற்றில் விறைப்பு போன்ற குணங்குறிகள் ஏற்படலாம். உடன் சிகிச்சை அளிக்கப்படாவிடில் குளுக்கோசின் அளவு மிகவும் தாழ்ந்த நிலைக்குப் போய் கோமா எனப்படும் மயக்க நிலை, வலிப்பு ஆகியவற்றுடன் மூளைக்கலங்கள் பாதிக்கப்பட்டு இறப்பும் நிகழலாம். இந்தச் சிக்கல் நிலை திடீரென ஏற்படுவதால் இது ஏற்படும்போது என்ன செய்யவேண்டுமென்பதை இன்சுலின் அல்லது மருந்துச் சிகிச்சை பெறும் ஒவ்வொரு நீரிழிவு நோயாளியும் அறிந்து வைத்திருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது.

**இச்சிக்கல் ஏற்படும்போது செய்ய வேண்டியது என்ன?**

அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கின்ற நிலையில் நோயாளி உடனே தனது குருதிக் குளுக்கோசின் அளவைப் பரிசோதித்து 4 mmol/L க்கு குறைவாக இருந்தால் அதன் அளவைக் கூட்டுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். குருதிப் பரிசோதனை செய்யும் வசதி இல்லையெனில் அதுபற்றிக் குழப்பமடையத் தேவையில்லை. அறிகுறிகள் தோன்றும் போது மிக விரைவாக உறிஞ்சப்படக்கூடிய 15 கிராம் அளவு கொண்ட காபோவைதரேற் அடங்கிய பானமோ உணவோ உடனே உட்கொள்ள வேண்டும். உட்கொள்ளக்கூடிய சில மாதிரிகள் கீழே தரப்பட்டுள்ளன.

15 கிராம் குளுக்கோஸ் வில்லைகள்
3 தேக்கரண்டி சீனி 1 கப் நீருடன்
175 மில்லிலிட்டர் ஆரஞ்சுப் பழச்சாறு போன்ற பானங்கள்
1 மேசைக் கரண்டி தேன்

இவற்றில் ஒன்றை உட்கொண்டால் குருதியில் குளுக்கோசின் அளவை அதிகரிக்கச் செய்து ஆபத்தான விளைவுகள்

(26ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

## 18வது ஆண்டு பூர்த்தி மலர்

கனடியத் தமிழரின் தனித்துவமான வெளியீடாக விளங்கும் 'தமிழர் தகவல்' சஞ்சிகை, அடுத்த நான்கு மாதங்களில், 2009 ஜனவரியில் 18 அகவையைப் பூர்த்தி செய்கின்றது.

இதனையொட்டிய பதினெட்டாவதாண்டு பூர்த்தி மலர் வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. சுமார் 160 பக்கங்களுக்கும் மேலானதாக மலர் அமையும்.

முன்னைய ஆண்டு மலர்களைப் போன்று தகுதியும் தராதரமும் கருத்தாழமும் மிக்க கட்டுரைகளைத் தாங்கியதாக 18வது ஆண்டு மலரை வெளியிட எண்ணியுள்ளோம்.

புகலிட மக்களுக்குத் தேவையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கட்டுரைகள் அமைய வேண்டியது அவசியம். சாதாரண கட்டுரைகள் 1500 சொற்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். விசேட தன்மையுள்ள, மற்றும் ஆய்வு சம்பந்தப்பட்ட கட்டுரைகள் மட்டும் 2000 வரையான சொற்களைக் கொண்டதாக இருக்கலாம்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் கட்டுரைகள் அமையலாம்.

ஏற்கனவே வெளியான கட்டுரைகள் ஏற்கப்பட மாட்டாது. புனைகதை இலக்கியங்களும் ஏற்கப்பட மாட்டா.

2009 நவம்பர் மாதம் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கட்டுரைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

மின்னஞ்சல் மூலமாக அனுப்ப வேண்டிய முகவரி: tamilsinfo@sympatico.ca

தபால் மூலமாக அனுப்ப வேண்டிய முகவரி: 18th Anniversary Issue, Tamils' Information, P.O.Box - 3, Station - F, Toronto, Ontario, M4Y 2L4. Canada

பிரதம ஆசிரியருடன் தொடர்பு கொள்ள விரும்பின், 416 920 9250 இலக்கத்தில் உங்கள் பெயரையும் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்தால், தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும்.

# Taking Control of Your Own Health

Dr. David Butler-Jones, M.D.
Chief Public Health Officer of Canada

As a Canadian, chances are high that you, your family, and your friends are among those who enjoy some of the best health in the world. While we may assume this is thanks in large part to Canada's health care system, there is far more to our health than just the hospitals and medical services we depend on.

Aside from genetics, our health is based on a wide range of things that we do and that happen to us. How well we eat, how active we are, and how well we avoid infectious diseases all make a difference. But whether we are healthy or not is also affected by social factors like our income, education, work, connections to family and friends, and housing situation.

So while health care is mostly about treating individuals, it is the role of public health to work with both individuals and communities to identify and address factors that affect our health and well-being.

But what does this mean? Well, Type 2 diabetes is one of our fastest growing, preventable, illnesses in Canada. Early detection and treatment is important, but it's far better if we can prevent it in the first place. So Public Health does surveillance work that tracks how this disease is growing, what types of people have it, what's causing it, and what we need to do to better control it. As diet and exercise are important, we encourage healthier eating and regular physical activity, while working to encourage safe places for kids to play and better food options and labeling so people can make the right choices for themselves.

We take for granted the seat belts and bike helmets, smoke-free pubic places, and safer food, drinking water, and workplaces that are not enjoyed by many other countries. But these are the result of many years of public health activity ranging from research to regulation to programs and public information. And immunization programs have eliminated the great childhood epidemics that used to fill our hospitals and leave thousands of children dead or disabled.

The federal government created the Public Health Agency of Canada to lead on these kinds of issues at the national level. Canada's Chief Public Health Officer's job is to oversee the work of the Agency, and to provide advice to the Government of Canada and Canadians on public health matters.

Public Health is about how different levels of government and communities can work better together to improve and protect health. Whether as a local public health worker, or at the provincial, territorial or national level, we're all about improving Canada's ability to prevent diseases, reduce injuries, and respond to public health emergencies and infectious disease outbreaks.

At the end of the day, we each must be involved in understanding and taking charge of what we can do to improve health. While collectively we work to improve the health and circumstances of all, it is what we do individually that can mean the difference between okay health, and great health. It requires, as best we can, looking after ourselves and our families and the choices we make. But it is also about understanding the connections between our health, our environment, and our social circumstances, and it involves working to strengthen the communities we live in by reaching out and supporting others.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணி வேலுப்பிள்ளை
## எழுதும் புதிய தொடர் -05

the **Bay of Bengal** = வங்காள விரிகுடா
a **parking bay** = ஊர்தி நிறுத்தும் இடம்
**at bay** = அகப்பட்ட நிலையில் = மாட்டுப்பட்ட நிலையில்
**hold the enemy at bay = keep the enemy at bay** = எதிரியை நெருங்கவிடாது தடுத்துநில்
My dog does not **bay at** the moon = எனது நாய் சந்திரனைப் பார்த்து ஊளையிடுவதில்லை

a **navigation beacon** = கடற்செலவுச் சுடர்
a **beacon of hope** = நம்பிக்கைச் சுடர்
a **string of beads** = மணி மாலை
**beads of sweat** = வியர்வைத் துளிகள் = வியர்வை மணிகள்

the **beam of light** = ஒளிக்கதிர்
How many **beams** does your house need? = உனது வீட்டுக்கு எத்தனை தீராந்திகள் தேவை?
a **beam of satisfaction** = உளம்நிறைந்த உவகை = உளம்நிறைந்த பூரிப்பு
Your calculation is **off beam** = உன் கணிப்பு தவறு
The speaker **beamed at** the audience = அவையோரைப் பார்த்து பேச்சாளர் உவகை பூத்தார்
This event will be **beamed** around the world = இந்த நிகழ்வு உலகம் முழுவதும் ஒலிபரப்பப்படும் (ஒளிபரப்பப்படும்)

I can't **bear** the pain = வேதனையை என்னால் தாங்க முடியவில்லை
The plan won't **bear scrutiny** = இத்திட்டம் நுண்ணாய்வுக்குத் தாக்குப் பிடிக்காது (நின்று பிடிக்காது)
Who will **bear the cost**? = செலவு பொறுப்பவர் யார்?
**bear a grudge** = காழ்ப்புக் கொண்டிரு
not able to **bear children** = பிள்ளைகள் பெற்றுக்கொள்ள முடியாத
**bear arms** = ஆயுதம் ஏந்து = படைவீரனாகு
This plan will **bear fruit** = இத்திட்டம் பலிக்கும் (வெல்லும்)
bring pressure to **bear on** the government = அரசாங்கத்துக்கு நிர்ப்பந்தம் ஏற்படுத்து
History will **bear out** our position = வரலாறு எமது நிலைப்பாட்டை மெய்ப்பிக்கும்
**bear up** against losses = இழப்புகளை மீறித் தெம்புகொள்
**bear with** me… = பொறுமையாக நான் சொல்வதைக் கேள்…
a **polar bear** = துருவக் கரடி

Her whole **bearing** was alert = அவளுடைய நடமாட்டம் முழுவதிலும் எச்சரிக்கை தெரிந்தது
Your protest has no **bearing on** our decision = உங்கள் ஆட்சேபம் எங்கள் முடிபைப் பாதிக்காது
**get your bearings = find your bearings** = சூழ்நிலைய உணர்ந்து செயற்படு
**lose your bearings** = குழம்பித் தடுமாறு

He **beat** me at chess = சதுரங்க விளையாட்டில் அவன் என்னை வென்றான்
**beat** inflation = விலையேற்றத்தைக் கட்டுப்படுத்து
This problem even **beats** the experts = நிபுணர்களையே இந்தப் பிரச்சனை ஆட்டிப் படைக்கிறது
**It beats me why he did it** = அவன் ஏன் அதைச் செய்தான் என்பது எனக்குப் புரியவில்லை
**beat** the record = முந்திய சாதனையை முறியடி
Let's leave early and **beat** the traffic = நாங்கள் வேளைக்கே புறப்பட்டு, ஊர்தி நெருக்கடியைத் தவிர்ப்போம்
**beat** a drum = மேளம் அடி
**beat** at the door = கதவில் அடி
**beat** the flour and milk together = மாவையும் பாலையும் கொட்டிக் கல
**beat** flat = அடித்துக் கிடத்து (அடித்துச் சப்பையாக்கு)
**beat a path through** the forest = காட்டினுள் பாதை ஏற்படுத்திச் செல்
**beat about the bush = beat around the bush** = சுற்றி வளைத்துப் பேசு
**beat them at their own game** = அவர்களுக்கு கைவந்த கலையிலேயே அவர்களை வெல்லு
**beat your brains out** = நெடு நேரமாகவும் கடுமையாகவும் சிந்தி = மூளையைப் பிய்
**beat your breast** = மாரடி
**beat the clock** = குறித்த வேளைக்கு முந்தியே பூர்த்திசெய்
**They beat a path to my house** = அவர்கள் ஆளும் பேருமாக எனது வீட்டுக்கு வந்தார்கள்
**beat the rap** = தண்டனையின்றித் தப்பிக்கொள்
**beat a (hasty) retreat** = (விரைந்து) பின்வாங்கு
**If you can't beat them, join them** = அவர்களை வெல்ல முடியாவிட்டால், அவர்களுடன் ஒத்துழைத்துப் பயனடை
**off the beaten track** = சந்தடியற்ற இடத்தில்
**a rod to beat somebody with = a stick to beat somebody with** = ஒருவரைக் கண்டிப்பதற்கு அல்லது தண்டிப்பதற்குப் பயன்படுத்தப்படும் விடயம் அல்லது வாதம்
**The Indian team will take some beating** = இந்திய அணியை வெல்வது கடினமாக இருக்கும்
**beat the door down** = கதவைத் தகர்த்துத் திற
The sun **beat down** = வெயில் பொசுக்கியது
**beat down** the price to cost = கொள்முதல் வரை விலையைக் குறைப்பி
**beat off the attackers** = தாக்குவோரை விரட்டியடி
**beat the fire out** = தீயை அடித்து அணை
**I beat my brother me out of** Rs.100 = நான் எனது சகோதரனை ஏமாற்றி 100 ரூபா கையாடினேன்
They **beat** me **to** the university = அவர்கள் என்னை முந்திப் பல்கலைக்கழகம் புகுந்தார்கள்
Police **beat** them **up** = காவல்துறையினர் அவர்களை அடித்து உதைத்தார்கள்
the **beat** of the drum = drumbeat = முரசொலி
Police officers **on the beat** = வழமையான சுற்றுக்காவலில் ஈடுபட்டுள்ள காவல்துறையினர்

natural **beauty** = இயற்கை அழகு
**beauty contest** = அழகிப் போட்டி
**beauty parlour = beauty salon = beauty shop** = ஒப்பனைக் கூடம்
**beauty queen** = அழகரசி
**beauty sleep** = அழகுறு துயில்
**beauty spot** = அழகுக் குறி = அழகு மையம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம்நிலைப் பாடசாலைக் கல்வியும் பாடத் தெரிவுகளும்

# Secondary School Education and Subject Choices



**கனகேஸ்வரி நடராஜா**
ஆசிரியர், இலங்கை-கனடா

புதிய கல்வித் திட்டம் ஆரம்பமாகி எதிர்வரும் கல்வியாண்டில் 10 வருடங்கள் ஆகிறது. ஆயினும் எங்கள் பெற்றோர்களில் பலருக்கும், சில பிள்ளைகளுக்கும் கூட இதுபற்றிய பூரண விளக்கம் காணப்படவில்லை. எத்தகைய பாடங்களைத் தெரிவு செய்ய வேண்டும், என்ன பாடங்களைத் தெரிவு செய்தால் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பன போன்ற விளக்கங்கள் இன்னுமே ஏற்படவில்லை. பல பெற்றோர்கள் இரண்டாம் நிலைப் பாட-சாலைக்குத் தங்கள் பிள்ளைகள் சென்றுவிட்டால் நான்கு வருடங்களின் பின் பல்கலைக்கழகம் தானே செல்லப் போகிறார்கள் எனத் தப்புக் கணக்குப் போடுகிறார்கள். பின்பு 12 வகுப்பும் முடிந்த பின்பு பிள்ளைகள் பல்கலைக்கழகம் செல்லாத போதுதான் அவர்கள் அதற்குரிய பாடநெறிகளையோ, அதற்குத் தேவைப்படும் விசேட சித்திகளையோ பெறவில்லை அதனால் அவர்களுக்குப் பல்கலைக்கழகம் செல்வது என்பது எட்டாத கனியாக அமைந்து விட்டதை காலம் கடந்த பின்பே அறிகிறார்கள். ஆகவே இரண்டாம் நிலைப் பாடசாலைக்கு அனுமதி கிடைத்தவுடனேயே கலைத்திட்டம் பற்றிய போதிய விளக்கங்களை பிள்ளைகளும், பெற்றோர்களும் பெறுதல் அவசியம். ஆங்கில அறிவோ, அன்றேல் இவற்றை விளங்கக் கூடிய திறனோ இல்லையென எந்த ஒரு பெற்றோரும் பயப்படத் தேவையில்லை. இவற்றையெல்லாம் பல பாடசாலைகளில் எட்டாம் வகுப்புப் பெற்றோர் இரவுகளில் விளங்கப்படுத்தியிருப்பார்கள். அவற்றினுக்குச் சமூகம் அளிக்கத் தவறியிருந்தாலும் இன்னும் காலம் கடந்து விடவில்லை. புதிய கல்வியாண்டு ஆரம்பமாகியவுடன் பாடசாலைக்குச் சென்று பிள்ளைக்குரிய வழிகாட்டி ஆலோசகரிடம் போதிய விளக்கங்களைப் பெறுதல் அவசியம். இரண்டாம் நிலைப் பாடசாலையில் ஒவ்வொரு பிள்ளைக்கும் அவரின் தந்தையாரின் பெயரின் முதல் எழுத்தின்படி வழிகாட்டி ஆலோசகர்கள் ஒதுக்கப்பட்டிருப்பார்கள். அவருடன் பெற்றோர் தாங்கள் அவரைச் சந்திப்பதற்கான ஒரு நேர அலகை தொலைபேசி மூலம் கேட்டுப் பெறுதல் வேண்டும். பின்பு ஒதுக்கப்பட்ட அரை மணித்தியால சந்திப்பில் என்ன கேள்விகள் கேட்கப் போகிறீர்கள் என்பதனை பட்டியலாகத் தயாரித்து எடுத்துச் சென்றால் அச் சந்திப்பு இலகுவாகவும், பிரயோசனமாகவும் அமையும். இந் நாட்டு கல்வி முறை பற்றிய விளக்கங்கள் கடினமானவை. ஒரு ஆசிரியரினதோ, அல்லது வழிகாட்டி ஆலோசகரின் உதவியோ இல்லாமல் இவற்றை விளங்கிக் கொள்வது கடினம். ஆகவே மாணவனும், பெற்றோரும் ஒன்றாகச் சென்று ஒரு வழிகாட்டி ஆலோசகரிடம் இரண்டாம் நிலைக் கல்வியின் ஆரம்ப காலத்திலேயே கலந்துரையாடுவது பின்பு பிரச்சனைகள் ஏற்படுவதைத் தவிர்க்க உதவும். இரண்டாம் நிலைப் பாடசாலைக்குள் காலடி எடுத்து வைக்கப் போகும் மாணவர்களின் வீடுகளில் சந்தோஷமும், ஆரவாரமும் தாராளமாகக் காணப்படும். தாங்கள் இனி High School மாணவர்கள், ஆகவே இற்றைக் காலம் வரை பெற்றோர் தெரிவு செய்த உடுப்புகள், சப்பாத்துக்களை அணிந்த காலம் மலையேறி விட்டதாகவும், தாங்களாகவே அவற்றை விலை கூடிய கடைகளில் தெரிவு செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருப்பார்கள். என்ன மாதிரியான கணினி, கைத் தொலைபேசி, இன்னோரன்ன உபகரணங்கள் தேவை என ஒரு பட்டியலே தயாரித்து வைத்திருப்பார்கள். இவற்றையெல்லாம் மிகவும் அக்கறையுடன் வாங்கிக் கொடுக்கும் பெற்றோர்கள், இத்துடன் தங்கள் கடமை முடிந்து விட்டதாகவும், பிள்ளைகளை மனம் குளிரச் செய்து விட்டதாகவும் கருதுகிறார்கள். இவற்றிற்கெல்லாம் மேலான இவர்களின் நேரசூசியைப் பற்றி மாணவரோ பெற்றோரோ பெரிதாகக் கவலைப்படுவதில்லை. பிள்ளையின் கல்வி என்பது பாடசாலையின் பொறுப்பு என அசட்டையாக இருந்து விடக்கூடாது.

இன்றைய இரண்டாம் நிலைப் பாடசாலைக் காலம் 4 வருடங்களாகும். 14 வயதில் இரண்டாம் நிலைப் பாடசாலையில் காலடி எடுத்து வைக்கும் ஒரு மாணவன் 17 அல்லது 18 வயதில் தனது பாடசாலை வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கிறான். இக் காலகட்டத்தில் இம் மாணவன் 30 விசேட சித்திகளைப் பெற வேண்டும். இதில் 18 கட்டாய விசேட சித்திகளும், 12 விரும்பிய பாட விசேட சித்திகளும் அடங்கும். இரண்டாம் நிலைப் பாடசாலைக் கல்வி என்பது விசேட சித்திகளின் அடிப்படையிலேயே இயங்குகிறது. இந்த விசேட சித்தி (Credits) என்பது 110 மணித்தியால வகுப்புக் கற்றலையும், 50க்கு மேற்பட்ட புள்ளிகளையும் கொண்டுள்ளது (மாகாண எதிர்பார்ப்பு 75 புள்ளிகளாகும்). 110 மணித்தியாலம் என்பதை பெற்றோரும், பிள்ளைகளும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது மாணவன் ஒழுங்காக வகுப்பில் பிரசன்னமாக இருக்க வேண்டும். பாடசாலைக்கு ஒழுங்காகச் சமூகம் அளிக்காவிட்டால் மாணவன் விசேட சித்தி பெற லாயக்கு அற்றவன் ஆகிறான். அத்துடன் இங்குள்ள கல்வி அமைப்பில் புள்ளிகள் நாளாந்தம் வகுப்பில் நடக்கும் சிறு, சிறு பரீட்சைகளுக்கும் வழங்கப்படுகிறது. இவற்றின் மொத்த கூட்டுத் தொகையே (Summative evaluation) ஈற்றில் மாணவன் பெறும் விசேட சித்தியின் பெறுமானமாகும். அத்துடன் குழுவாக ஒப்படைகளை சமர்ப்பிக்கும் பொழுது குழு அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் அவருக்கென பிரத்தியேகமாக ஒரு பங்கு உண்டு. ஒருவர் வருகை தராவிட்டால் கூட ஒப்படையை கூட்டாகச் செய்து முடிக்க இயலாது. ஆகவே பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தருதல் இன்றியமையாதவொன்று.

இனி இந்த நேர சூசியின் முக்கியத்துவத்தை நோக்குவோம். 9 வகுப்பிலும், 10 வகுப்பிலும் இவர்களின் பாடநெறிகள் 3 பெரும் பிரிவில் அடங்கும். அவையாவன கல்வி சார்ந்த நெறிகள் (Academic Courses) பிரயோக நெறிகள் (Applied Courses) பொது நெறிகள் (Open Courses).

கல்விசார்ந்த நெறிகளைப் பயிலும் ஒரு மாணவன் தான் பல்கலைக்கழகம் செல்ல முடியும். இங்குதான் நம்மவர்கள் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். பல பிள்ளைகள் ஒரு விளக்கமும் இல்லாமல் இந் நெறிகள் கடினம் எனக் கருதி பிரயோக நெறிகளைப் பின்பற்ற முற்படுவர். பாடசாலைகளிலும் மாணவர்களின் எண்ணங்களுக்கும், முடிவுகளுக்கும் மதிப்புக் கொடுப்பார்கள். ஆகவே விரும்பியபடியெல்லாம் நேரசூசியில் மாற்றங்களை மாணவர்கள் தம் இச்சைப்படி செய்ய முற்படுவார்கள். பெற்றோர் பிள்ளைகள் பல்கலைக்கழகம் செல்வார்கள் என்ற கனவு இரண்டாம் நிலைப் பாடசாலை ஆரம்பத்திலேயே கலைபட்டு விடுகிறது. கல்வி சார்ந்த நெறிகளில் அறிவுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. (Knowledge skills).

பிரயோகம் சார்ந்த பாடநெறிகளில் (Applied Courses) கல்விசார்ந்த நெறிகளில் கற்பிக்கப்படும் அதே விடயங்கள் தான் கற்பிக்கப்படுகின்றன, ஆனால் இதன் தரம் குறைவாக இருக்கும். இங்கு செயல்முறைகளுக்கு முக்கியத்துவம் (Hands on Application) கொடுக்கப்படுகிறது.

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிநாயகர் கந்தவனம் தரும்

## கனடியக் காட்சிகள்

# நான்கு காட்சிகள்

காட்சி 1:

ஒரு வயோதிபப் பெண் வீதி ஓரத்தில் கூனியபடி நிற்கிறார். அறப்பணி ஒன்றுக்கு நிதி திரட்ட வந்திருக்கிறார். அறப்பணியை விளக்கும் துண்டுப் பிரசுரங்களைப் போவார் வருவாருக்கு நீட்டுகிறார். அவரை யாரும் கவனிப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும் அவர் இடையிடையே வாயாலும் தனது பணியைப்பற்றிச் சொல்லிக்கொண்டு, ஆட்களை அழைத்த வண்ணம் நிற்கிறார். உதவுகின்றவர் மிகக்குறைவு.

காட்சி மாறுகிறது. ஒரு கிழவி நின்ற இடத்தில் இப்பொழுது இரு குமரிகள். உடல் தெரியும் உடுப்புகளோடு அதே அறப்பணிக்கு நிதி சேர்க்கிறார்கள். தளதள குளுகுளு மேனியரைச் சுற்றி ஈக்கள் மொய்ப்பதுபோல் ஆட்கள். வேறு யார்? ஆண்கள்தான். நிதி வேகமாகச் சேருகிறது.

காட்சி 2:

கடற்கரையில் தற்கலிகமான மலகூடம். அதற்குள் ஒரு பெண் சென்று கதவைச் சாத்துகிறாள். பின்னர் அவள் கதவைத் திறந்துகொண்டு வெளியே வரமுயல்கையில் கரையில் இருந்த மலகூடம் கடலில் மிதப்பதைக் கண்டு பதைபதைக்கிறாள். உதவிக்குக் கூச்சல்போடுகிறாள். ஒருவர் வந்து தண்ணீருக்குக் கீழ் தாண்டிருந்த கயிறு ஒன்றைப் பிடித்து இழுக்க மலகூடம் கரையை அடைகிறது. கலங்கிய பெண் களிப்புடன் மண்ணிலே காலை வைக்கிறாள்.

காட்சி 3:

இதுவும் ஒரு மலகூடக் காட்சிதான். இது நகரத்தின் மத்தியில் உள்ள பொதுக் கூடம். வாயிலில் ஆண், பெண் அறிவித்தல் வழக்கம்போல. பெண் பகுதிக்குள் ஒருவர் செல்ல, மறுகணம் அதற்குள் ஆண் ஒருவர் வருகிறார். வியப்புடன் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு திரும்பிச் சென்று பார்த்தபோது கூடம் பெண்களுக்குரியதென்றே இருக்கிறது. ஆனால் அவர் முன்னர் உள்ளே நுழைந்தபோது ஆண் என்று இருந்ததே என்று ஆச்சிரியத்தோடு மற்றப் பக்கத்தைப் பார்க்கிறார். அது ஆண் என்று இருக்கிறது. தான்தான் பிழைவிட்டதாக உணர்ந்துகொண்டு அந்த ஆண் பகுதிக்குட் செல்கிறார். அவரைக் கண்டதும் அதற்குள் இருந்து ஒரு பெண் உடுப்பைச் சரிசெய்தவாறு வெளியே ஓடி வருகிறாள். அந்த ஆணும் அந்தரப்பட்டுக்கொண்டு ஓடிவந்து பார்த்தால் அவர் போன பகுதி பெண்களுக்குரியதாக இருப்பதைக் கண்டு மூக்கிலே விரலை வைக்கிறார்.

காட்சி 4:

வாகனம் ஒன்றை மறித்து நகர்காவலர் குற்றத் துண்டு கொடுக்கிறார். அவர் என்ன குற்றம் என்று கேட்கிறார். நிற்பாட்டும் இடத்தில் நிற்பாட்டாது சென்ற குற்றம் என்கிறார். நிற்பாட்டும் சின்னம் இல்லையே என்று வாதாடுகிறார். அதற்குள் மற்றொரு வாகனம் வருகிறது. அதற்கும் துண்டு கொடுக்கப்படுகிறது. அவரும் அதே கேள்வியைக் கேட்கிறார். அவருக்குப் பதில் சொல்வதற்கிடையில் மூன்றாவது வண்டி வந்துவிட்டது. மூன்றுபேரும் Stop Sign எங்கே இருக்கிறது என்று கேட்கிறார்கள். நகர் காவலர் மூவரையும் அழைத்துச் சென்று மரக்கிளைகளுக்குள் மறைந்திருந்த நிறுத்தற் சின்னத்தைக் காட்டுகிறார். அப்படி ஒரு சின்னம் அந்த இடத்தில் இருந்ததில்லை என்று அவர்கள் முறையிடுகின்றனர். அவர் அன்று காலைதான் நடப்பட்டது என்கிறார்.

இப்படி எத்தனையோ நகைச்சுவைக் காட்சிகளைத் தொலைக் காட்சியில் Just for Laughs என்ற நிகழ்ச்சியில் இடைக்கிடை பார்ப்பதுண்டு.

## இரண்டாம்...

பொதுப் பாட நிரல்கள் (Open courses) எல்லா மாணவர்களுக்கும் ஒரு பொதுவான எதிர்பார்ப்பை மாத்திரம் உடையதாக இருக்கிறது. 11, 12 வகுப்புகளில் செய்யப் போகும் பாடங்களுக்கு இது ஒரு பரந்த அடித்தளமாக அமைகிறது.

ஏற்கனவே உள்ள பாடநெறிகளை கையாள முடியாத மாணவர்களுக்கு பிரத்தியேக கல்விச் சபைகள் கல்வி இலாகாவின் கட்டுப்பாட்டுக்கமைய தயாரிக்கப்பட்ட விசேட கல்வி நெறிகளைப் போதிக்கும். உதாரணமாக ஆங்கிலப் புலமை குறைந்த புதிதாக நாட்டுக்கு வருகை தந்த மாணவர்களுக்கு விசேட விஞ்ஞான, புவியியல் பாடங்கள் போதிக்கப்படும்.

11, 12 வகுப்புகளுக்கான பாடநெறிகள் மாணவர்களின் எதிர்கால இலக்குகளுக்கமைய 5 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. மாணவர்களை வேலைகளுக்கு ஆயத்தம் செய்தல் (Workplace Preparation). கல்வி கற்பதில் கஷ்டங்களை எதிர்நோக்கும் மாணவர்கள் தொழிற்பயிற்சிகளுக்கு தயார் செய்யப்படுகிறார்கள் (Apprenticeship).
2. சமூகக் கல்லூரிகளுக்கு ஆயத்தம் செய்தல் (College Preparation). இப் பாடநெறிகள் சமூகக் கல்லூரிகளுக்கு அனுமதி பெறுவதற்கு வேண்டிய தகைமைகளை வழங்குகின்றன. இப் பாடங்களோடு பல்கலைக்கழகம் செல்ல முடியாது.
3. பல்கலைக்கழகம்/சமூகக் கல்லூரிகளுக்கான நெறிகள் (Specific Universities/Community Colleges). இவை சில குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களுக்கும், சமூகக் கல்லூரிகளுக்கும் அனுமதி பெறும் தகைமையை வழங்குகின்றன.
4. பல்கலைக்கழகத்துக்கு ஆயத்தம் செய்யும் நெறிகள் (University Preparation Courses). இப் பாடநெறிகளே பல்கலைக்கழகம் செல்ல உதவுகின்றன. இப் பாடங்களைக் கற்று அவற்றில் பெறும் சராசரியின் அடிப்படையிலேயே பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவாகின்றனர்.
5. பொதுப் பாடங்கள் - (Open Courses). இவை மாணவரின் விருப்பம், திறனுக்கமைய அறிவு விருத்திக்காகச் செய்யலாம்.

இங்குள்ள கலைத்திட்டத்தில் நூறுக்கும் மேற்பட்ட பாடங்கள் காணப்படுகின்றன. மாணவர்கள் தமது விருப்பத்திற்கும் ஆற்றலுக்கும் அமைய பாடங்களைத் தெரிவு செய்யலாம். ஆனால் தமது எதிர்கால இலக்குகளுக்கு ஏற்றவாறு பாடங்களைத் தெரிவு செய்தல் இன்றியமையாதது. சாதாரணமாக வகுப்பில் கற்பிக்கப்படும் பாடங்களில் சில மாணவர்கள் அளவுக்கதிகமான கெட்டித்தனம் உடையவர்களாக அமையலாம். இவர்களுக்கென சில பாடசாலைகளில் மீள்திறன் வகுப்புகள் உண்டு. உதாரணமாக Enriched Math. அனுபவம் மூலம் வருடங்கள் செல்லச் செல்லத்தான் மாணவர்களுக்கு இவை பற்றிய விளக்கம் ஏற்படும். கல்வியாண்டு ஆரம்பமாகி ஒரு மாதத்தின் பின் கலைத்திட்ட இரவு (Curriculum Night) நடைபெறும். இதற்குப் பெற்றோர் பொதுவாகச் செல்வது குறைவு. கட்டாயமாக இதற்குப் பெற்றோர் சமுகமளித்தல் வேண்டும். ஒவ்வொரு பாட ஆசிரியரும் தாங்கள் எவ்வாறு புள்ளிகள் வழங்கப் போகிறார்கள் என்பதனை விளக்குவார்கள் (Breakdown of marks). இங்கு புள்ளிகள் பெறுவதற்கு கெட்டித்தனத்திலும் பார்க்க நாளாந்தம் கவனமாகவும் ஒழுங்காகவும் ஒரே சீராகக் கற்றலே முக்கியம். இந் நாட்டில் பல்கலைக்கழகம் செல்வது ஒரு மிகவும் இலகுவான விடயம். மாணவர்கள் ஒழுங்காகப் படிக்கிறார்களா என மேற்பார்வை பார்ப்பது பெற்றோரின் கடமையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனுவல் ஜேசுதாசன்
கனடிய வழக்குரைஞர்

# பிள்ளைகளை அடிப்பது நல்லதா கெட்டதா?

"நாங்களும்தான் மறக்கவில்லை." கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் "மனுவல் யேசுதாசனுடன் மாதம் ஒருமுறை" நிகழ்ச்சியின் சக அறிவிப்பாளர் நிமலன் அந்த பெரியவரின் கூற்றை ஆமோதித்தார். "எனது தகப்பனாரும் என்னை அடித்தார், பலமாக அடித்தார். இருப்பினும் அவரில் நான் இதுவரை எதுவித மனஸ்தாபமும் கொள்ளவில்லை. காரணம் அவர் என்னை திருத்துவதற்காகத்தான் அடித்தார்." நிமலன் தொடர்ந்து கூறினார்.

என்னைப் பொறுத்த மட்டிலும் எனது தகப்பனார் என்னை அடித்ததையும், அதை எனது நன்மைக்காகச் செய்தார் என்பதையும், அடிக்கப்பட்ட சந்தர்ப்பங்களை நான் இன்றும் நினைவில் வைத்திருக்கிறேன் என்பதையும் என்னாலும் மறுக்கமுடியாது.

யாழ்ப்பாண ஆவணி மாத கொதிக்கும் வெய்யில் நாள். பாடசாலை விடுமுறை நாட்கள்; நான் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறேன். எனது ஐயாவின் சிறியதாய் அன்னப்பட்சி, நான் அவரை "சித்தா" என அழைப்பேன், யாழ்குடா பரவக் கடலில் பண்ணை பாலத்திற்கும் யாழ் குடாநாட்டையும், அதைச் சூழ்ந்த தீவுகளையும் இணைக்கும் பிரதான பண்ணை வீதிக்கும் மேற்கு திசையில் அமைந்திருக்கும் "குருசடித்தீவு" எனும் சிறிய தீவில் உல்லாசப் பயணம் ஒன்றை ஒழுங்கு செய்தார். இந்த தீவுக்கு நான் எனது பெற்றோர்களுடனும் சகோதர சகோதரிகளுடனும் பல தடவைகள் உல்லாசப் பயணம் சென்றுளேன், விசேடமாக புனித அந்தோனியார் திருநாள் இத் தீவில் கொண்டாடப்படும் காலங்களில். மீன்பிடித் தொழிலுக்காக இத்தீவில் தங்கியிருந்த சிலர் ஒரு கொட்டில் கட்டி பீடம் அமைத்து அதன் மேல் புனித அந்தோனியார் சிலை ஒன்றையும் வைத்தார்கள். வடக்கில் யுத்தம் ஆரம்பமாகும் காலம் வரை வருடா வருடம் இங்கு திருவிழா நடைபெற்று வந்தது. இத்தீவில் எப்பொழுதும் உல்லாசம்தான். தீவைச் சுற்றியுள்ள பரவைக்கடல் மிகவும் பாதுகாப்பானதும் நட்பானதும். சிறுவர்களாக நாங்கள் ஒரு நாளின் பெரும் பகுதியை கடலில் கரையை ஆசிக்கும் மீன்களுடன் நீந்திக் கழிப்போம். அவற்றில் சில எங்கள் கால்களிலும் தேகத்திலும் உள்ள காயங்களை சுவைபார்க்கும், சிறிய நண்டுகள் எங்கள் காலடி அரவம் கேட்டு விரைவாக நகர்ந்து சென்று மணல் நிலத்தில் தங்களைப் புதைத்துக்கொள்ளும். அந்த வயதில் கூட எனது ஒன்றை விட்ட சகோதரர்களுக்கு நண்டு தனது கால்களால் கவ்வாமல் அதைப் பிடிப்பதற்கு தெரிந்திருந்தது. நிலத்தில் அவை பதுங்கியிருக்கும் அமைப்பிலிருந்து கால் எந்தப்பக்கம் உடல் எந்தப்பக்கம் என்பதை அறிவார்கள். நான் பயம் காரணத்தால் பல தடவைகள் முயன்றும் ஒருமுறை தன்னும் நண்டுகளை வெற்றி கொள்ளவில்லை. நாங்கள் கடலில் செல-வழித்த நேரத்தைத் தவிர்த்து மிகுதி நேரத்தை தீவைச் சுற்றி அலைந்து திரி-வதில் ஈடுபடுவோம். கரை ஓரமாக அபூர்வமான சிப்பிகள், தீவின் நடுப்பகுதியில் கொளுத்தும் வெய்யிலில் செழித்து வளரும் குள்ள மரங்களிலும், படரும் கொடிகளிலும் காய்க்கும் பழங்களையும் தேடி அலைவோம். சிவத்த மிளகாய் போன்ற "கொவ்வைப்" பழம், படரும் கொடியில் பை போன்ற ஒன்றுக்குள் ஒழிந்திருக்கும் தக்காளி சுவைகொண்ட "காட்டுத்தக்காளிப் பழம்" – இவைதான் பெரும்பாலும் எமது இலக்கு.

மாலை நேரங்களில் வயது பிரிவின்படி உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், கிளித்தட்டு போன்ற விளையாட்டுக்களில் பங்கேற்பார்கள். உல்லாசப் பயணவேளை இரு நாட்கள் தங்கியிருப்போம். சிறுவர்கள் பெற்றோர்களின் பார்வைக்கப்பால் தீவின் நடுப்பகுதியில் தங்களின் பிரத்தியேக சமையல் செய்வார்கள். இத்தீவுக்கு உல்லாசிகளாக வருபவர்கள் பெரும்பாலும் எமது கிராமத்தைச் சேர்ந்தவர்களாதலால் பெற்றோர்கள் பிள்ளைகளைப் பயமின்றி தீவில் அலைந்து திரிவதற்கு, சில சமயங்களில் மகாராஜாவின் உடையில், சுதந்திரம் கிடைத்தது. சித்தி என்னையும் குருசடித்தீவு உல்லாசப் பயணத்துக்கு செல்ல அனுமதி தரும்படி கேட்டார். ஆனால் எனது ஐயா அதற்கு மறுப்பு தெரிவித்துவிட்டார். எனது உறவினர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அனுமதி கொடுத்தார்கள். நான் மிகவும் ஏமாற்றமும் கவலையும் அடைந்தேன். கரையில் நின்று அவர்கள் எல்லாரும் ஒரு சிறிய தோணியில், கூடை நிறைய உணவும்,

(26ம் பக்கம் வருக)

"கட்டாயமாக, பிள்ளைகளை அடிக்க கூடாதென்ற சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். நான் அதை ஆதரிக்கிறேன். கடந்த காலங்களில் நான் எனது பேரப்பிள்ளைகளை அடித்திருக்கிறேன். ஆனால், ஒருநாள் அவர்களிடமிருந்து ஒரு பாடம் கற்றுக்கொண்டேன்: எனது பேரப்பிள்ளைகள் அன்று தமக்குத் தெரிந்தவர்களைப் போல் பாசாங்கு பண்ணிக்கொண்டு நடித்தார்கள். அதை நான் மிகவும் ஆவலோடு பார்த்து ரசித்துகொண்டு இருந்தேன். மிகவும் சுவாரசியமாக இருந்தது. அவர்கள் எவ்வளவு திறமைசாலிகள் என்பதை அவதானித்தேன். ஒவ்வொருவரும் தமது ஆசிரியர்களைப் போலவும், பெற்றோர்களைப் போலவும், தமது சில நண்பர்களைப் போலவும் நடித்துக் காட்டிக்கொண்டிருந்தார்கள். இலங்கையில் அரசாங்க உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்று கனடாவில் செய்வதறியாது தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்து நேரத்தைத் தொலைக்கும் எனக்கு இவர்களின் நடிப்பு 'சன் டிவி'யில் வரும் கலக்கப்போவது யாரு என்ற நிகழ்சியை நேரில் பார்ப்பதைப் போல் இருந்தது. அப்பொழுது என்னைப் போல் இவர்கள் ஏன் நடித்து காட்டவில்லை என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் அவர்களிடம் கேட்டேன், உங்கள் தாத்தாவை போல் நடித்துக் காட்டமுடியுமா?. உடனே எனது குட்டிப்பேரன் சிறிது நேரம் மறைந்து விட்டான். பின் தனது அறையில் இருந்து வெளியே வந்தான். அவன் கையில் உடை கொழுவும் கொழுவி இருந்தது. உடனே தனது அண்ணாவை விகார முகத்துடன் அடிப்பதுபோல் பாசாங்கு பண்ணினான். நான் இப்படியா?... ஒருகணம் யோசித்தேன். மறுகணம் அப்படி நான் செய்திருப்பேன் என மனதில் ஆமோதித்தேன். அவன் என்னைப் போல் இருந்தான். கடைசி முறையாக நான் எனது பேரன்மாரைக் குழப்படி செய்யாமல் திருத்துவதற்காக கொழுவியை எடுத்து கண்டித்தது சுமார் மூன்று வருடங்கள் இருக்கலாம். அப்பொழுது இந்தப் பேரனுக்கு மூன்று வயது இருக்கும். நான் ஒருபோதும் இவனைக் கண்டித்ததில்லை. இவனது மூத்த சகோதரர்கள் குழப்படி செய்யும் பொழுதுதான் அவர்களைக் கண்டித்திருக்கிறேன். இவர்கள் என்னைப்பற்றி பாசங்கு பண்ணிய பொழுதுதான் புரிந்துகொண்டேன் குழந்தைகள் யார் எப்பொழுது எந்தவிதமான தண்டனை அவர்களுக்கு வழங்கினாலும் அதை எப்பொழுதும் நினைவில் வைத்திருப்பார்கள், அந்த தண்டனை நல்ல நோக்கத்துக்காக இருந்தாலும் கூட. எனது தகப்பனார் நான் சிறுவனாக குழப்படி செய்தபொழுது என்னை அடித்ததை இன்றும் நான் மறக்கவில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எஸ். ஜெகதீசன் எழுதும்
## பத்தாம் பக்கம்

### களவு

களவும் கற்று மற என்றால் என்ன?

உலகில் ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் அதில் பட்டம் பெறு. பின்னர் கலாநிதி என மறவாது போடு என்பதா? இல்லையே'

வாழ்வில் ஒரே முறை மட்டும் களவியலில் கரிசனை காட்டு. காதலிக்கும் போது பெற்றோர் உற்றார் உறவினர் எவருக்கும் தெரியாதவாறு களவாக சிலிர்ப்படை.பின் அதனை முற்றாக மறந்துவிட்டு அடுத்த நிலையாக கற்பியலில் ஊர் அறிய மணம் புரிந்து உள்ளத்தால் உருகு என்பவர்கள் தமிழைக் காதலிப்பவர்கள்.

கத்து என்றால் சூது. எனவே களவையும் சூதையும் மற எனும் தமிழ்த் தவசிகள் களவும் கத்தும் மற என்பதனையே மோகிப்பர்.

ஆனால் ரொறன்ரோ விழிகளை உருட்டிய களவிற்கும் இதற்கும் தொடர்பில்லை. பழையன, புதியன, ஆண்களுக்கானவை, பெண்களுக்கானவை, சிறாருடையவை, வலுவிழந்தோருடையவை, உல்லாசப் பயணிகளுக்கானவை, பந்தயத்துக்குகந்தவை என ஏராளமான திருட்டுச் சைக்கிள்களை பொலிஸார் ஜுலை மாதம் மீட்டனர்.

பணக்கார நாடொன்றில் சைக்கிள் திருட்டு பிச்சைக்காரத்தனமானது.

சைக்கிள் திருட்டு சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட வெள்ளையனிடமிருந்து மூவாயிரம் சைக்கிள்கள், பதினாறு வெவ்வேறு தளங்களிலிருந்து கைப்பற்றப்பட்டன. திருட்டு மற்றும் போதை வஸ்து விற்பனை என 58 குற்றங்கள் சுமத்தப்பட்டன. மனைவியும் பணியாளும் உடந்தை என தெரிவிக்கப்பட்டது. சைக்கிள் கிளினிக் என்பது பணியக பெயர்.

இத்திருட்டு நடவடிக்கையை முறியடிக்க 160 பொலிஸார் கடந்த ஆறு மாத காலமாக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். விற்பனைக்கு தயாராக இருந்த 2500 சைக்கிள்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஏனையவை உதிரியாகி உதிர்ந்து தெரிந்தன.

சுமார் 2000 பேர் இதனைப் பார்வையிட்டனர். கடந்த காலங்களில் சைக்கிள்களை தொலைத்தவர்களில் 350 பேர் அடையாளங்காட்டி தத்தமது சைக்கிள்களை மீளப் பெற்றுக் கொண்டனர்.

ஆனால் பாவம் சைக்கிளை மட்டுமல்ல சந்தர்ப்பத்தையும் தவற விட்டவர்கள். ஏனெனில் மிகுதியாவும் ஏலத்தில் விடப்பட்டு பொலிஸ் விசேட நிதியத்தில் சேர்ந்தது.

எனினும் என்ன' எதிர்காலத்தில் தொலைக்கவிருப்பவர்கள் சற்று அவதானமாக சைக்கிளின் தொடர் இலக்கத்தை எங்கேயாவது தொலையாத இடத்தில் குறித்து வைக்கலாம். வாங்கியதற்கான பற்றுச்சீட்டையும் பாதுகாக்கலாம். எச்சரிக்கை உணர்வு உள்ளவர்கள் சைக்கிளின் படத்தைக் கூட எடுத்து வைத்துக்கொண்டு தமது புத்திசாலித்தனத்தை மெச்சலாம்.

அவர்கள் எப்போதாவது சைக்கிளைத் தொலைத்து விட்டு பொலிஸாரின் போக்குவரத்து பிரிவு அமைந்துள்ள 9 Hanna St.Toronto என்ற விலாசத்திற்கு பின்னர் நடையாய் நடந்தால் இந்த விபரங்கள் அங்கு கோரப்படும்.

போக்குவரவு பிரிவின் தொலை பேசி இலக்கம். 416 808 1900. அவசரமாகக் குறித்து வைத்தால் ஆறுதலாக உதவிடுமா அல்லது ஆறுதலாகக் குறித்து வைத்தால் அவசரத்திற்கு உதவிடுமா என்பது எனக்கு தெரியாது.

சைக்கிளைத் தொலைத்த பலர் பொலிஸாரிடம் அதனை முறையீடு செய்வதே இல்லை. பல காரணங்களுக்காக ரொறன்ரோவில் குற்றவியல் விகிதம் அதிகரித்துச் செல்வதால் பொலிசாருக்கு சைக்கிள் களவு போன்ற சிறு குற்றங்களை கண்காணிக்க அவகாசம் கிடைப்பதில்லை என்ற தவறான கருத்தும் நிலவுகின்றது. தவிர இதர வாகனங்களுக்கு உள்ளது போல அடையாளத் தகடுகள் பொருத்தப்பட்டு உடனடியாக பொலிஸின் கணினியில் பதிய வேண்டும் என்கின்றாகள் பொலிஸ் அதிகாரிகள்.

றலி, றச், ஹம்பர், ஆசியா, பி.எஸ்.ஏ, அட்லஸ், ஹேர்குலிஸ் என விதவிதமான சைக்கிள்களில் கிராமிய கையொழுங்கைகளிலும் காடுகரம்பைகளிலும் சுழன்ற நாட்கள் புழுதிபடிந்த களவு போகாத நாட்கள்.

## எஸ். சிவநாயகமூர்த்தியின் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடு

இலங்கையில் ஆசிரியராகவும் கல்வி அதிகாரியாகவும் பணியாற்றிய எஸ். சிவநாயகமூர்த்தி அவர்களின் 'பெற்றோர் அறிய வேண்டியவையும் மாணவர் பிரச்சனைகளும்' என்ற கட்டுரைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா, இந்த மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5:30 மணிக்கு கனடா கந்தசாமி கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைவரையும் நூலாசிரியர் அன்புடன் அழைக்கின்றார்.

## 'லண்டன் ரைம்ஸ்' நிறுவன ஆசிரியர் காலமானார்

இங்கிலாந்திலிருந்து பல வருடங்களாக மாதாந்தம் வெளிவந்த 'லண்டன் ரைம்ஸ்' மாதாந்த ஆங்கிலச் சஞ்சிகையின் நிறுவன ஆசிரியர் திரு. என். எஸ். கந்தையா அவர்கள் கடந்த மாதம் 26ஆம் திகதி லண்டனில் காலமானார். ஆசிரியராகவும், சமயப் பணியாளராகவும், ஊடகவியலாளராகவும் நற்பணிபுரிந்தவர் இவர்.

## பிள்ளைகளுடன் பயணிக்கையில் புகைபிடிக்கத் தடை

பதினாறு வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் வாகனத்தினுள் இருக்கும் போது, புகை பிடிக்கத் தடை செய்யும் சட்டம் அமுலாக்கப்படவிருக்கின்றது. மூன்று கட்சிகளினதும் சம்மதத்துடன், இத்தடை சட்டமாக்கப்படவுள்ளது. இதன் பின் பொலிஸார் வயது வந்தவர்களுக்கு $250 டாலர்களை குற்றத்தொகையாக அறவிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கான்சர் ஆராய்ச்சிக்கு அதிவேக கணினி

ஒன்ராறியோ கான்சர் இன்ஸ்ரிரியூட்டிற்கு அதிவேக கணினி வழங்கப்பட்டுள்ளது. கனடாவிலேயே ஆராய்ச்சிக்கென வழங்கப்பட்டவற்றுள் இதுவே அதிவேகமானதாகும். இதன் வேலை நேரத்துடன் போட்டி போட்டு, கான்சர் நோயின் மர்மத்தினை பகுத்தறிவதாகும். இக் கணினியின் உதவியினால், கனடிய விஞ்ஞானிகள், கான்சருக்குக் காரண-மான புரதங்களின் அமைப்புகளை அடையாளம் காண்பதன் மூலம், ஆரம்பத்திலேயே கான்சரை இனங்காண்பதற்கும், மிகத் தரமான மருத்துவ சேவையினை வழங்கவும் கூடியதாகவிருக்கும். இந்த இன்ஸ்ரிரியூட்டில், கான்சர் ஆராய்ச்சி யின் தலைமை அதிகாரியான டாக்டர் இகோர் ஜீரிஸிகா, இந்தக் கணினியின் வரவினால், 10,000 புரதங்களின் 90 மில்லியன் வடிவமைப்புகளை ஆராய்வது 2009 ஆண்டளவில் முடியும் என்கிறார். அதாவது முன்னர் கணக்கிட்ட காலத்தில் ஐந்து வருடங்களின் முன்னரே இவ்வேலை முடிவடையும்.

# புது மெருகுடன் பேருந்து தரிப்பிடங்கள்

ரொறன்ரோ நகர பஸ் தரிப்பிட வடிவங்களில் மாற்றங்கள் வரவுள்ளன. அடுத்த பஸ் வர இன்னும் எத்தனை நிமிடங்கள் உள்ளன என்பதனை டிஜிட்டல் ஸ்கிரீனில் காணலாம். ஏறத்தாழ 25,000 இவ்வகையான தரிப்பிடங்கள் அடுத்த 20 வருடங்களில் நகரம் முழுவதும் அமைக்கப்பட இருக்கின்றன. அதில் 1,800 இவ்வருட முடிவுக்குள் அமைக்கப்படும். இந்த அழகிய வடிவ தரிப்பிடங்களில், கால்களால் அமர்த்தி திறக்கக் கூடிய குப்பைத் தொட்டிகளும், பலவகையான பத்திரிகைப் பெட்டிகளும் காணப்படும். விளம்பரங்கள் பஸ் தரிப்பிடங்களிலும், அதற்கென அமைக்கப்பட்ட தாங்கிகளிலும் மட்டுமே காணப்படும். குப்பைத் தொட்டிகளிலோ, மீள உருமாற்றிப் பாவிக்கச் சேகரிக்கும் தொட்டிகளிலோ காணப்பட மாட்டாது. ரொறன்ரோவின் ஒவ்வொரு சந்திகளிலும் இந்தத் தரிப்பிடங்கள் அமைக்கப்படும். ஆனால், அந்தப் பகுதிகளின் தேவை, இடவசதி, மக்கள் தொகையைப் பொறுத்து இவை வடிவமைக்கப்படும்.



குயின்ரஸ் துரைசிங்கம் 25

**கணினிப் பக்கம்**

# காக்க காக்க கணினி காக்க...

**யுனிகோட் என்றால் என்ன?**

ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு தனிப்பட்ட இலக்கத்தை வழங்குகின்ற தகுதரம் தனிக்குறியீடு (unicode) என்றழைக்கப்படுகிறது. உலகிலுள்ள அனைத்து மொழிகளையும் எடுத்து, அதிலுள்ள அனைத்து எழுத்துக்களையும் எடுத்தால், ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு தனிப்பட்ட இலக்கத்தை வழங்குவதை, தனிக்குறியீடு என்று அழைக்கிறார்கள். 2944 இலிருந்து 3071 வரையான இலக்கங்கள், தமிழ் எழுத்துக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இது உலகிலுள்ள ஏனைய மொழிகளுக்கு உலகளாவிய ரீதியில் வழங்கப்பட்டுள்ள இலத்திரனியல் இலக்கமிடல் திட்டத்தின் கீழ் பொதுமைப்படுத்தப்பட்ட முறை என்பதால், தமிழ் மொழிக்கும் உலக தரத்திலான தனிக்குறியீடு கிடைக்கிறது.

சர்வதேச இணையத்தில் தமிழில் தேடுவதற்கான வாய்ப்பும் இந்த யுனிகோட் எழுத்துரு முறையின் கீழ் உருவாகிறது. தமிழ் மொழி சார்பான விடயங்களை தமிழ் மொழியில் தேடுவதற்கு இந்த யுனிகோட் முறை வசதியை வழங்குகிறது.

பயனாளர்களைப் பொறுத்தவரை, தகுதரம் அல்லது யுனிகோட் என்ற குறியீட்டு முறையைப் பற்றிய விவரங்களையும் வரைவிலக்கணங்களையும் விட, அவரவரின் தேவை வேகமாக, சுருக்கமாக, நேரடியாக நிறைவேற்றப்படுகிறதா என்பதே முக்கியமானதாக இருக்கிறது.

பல மொழிகள் ஒரே செயலியில் இயங்க வேண்டிய சூழ்நிலைக்கு இன்றைய வேகமான இலத்திரனியல் உலகம் மாறிவிட்டது. ஒரு மொழியில் இருந்து இன்னொரு மொழிக்கு மாறுவதற்கும், ஒரு சொற்பதம் எந்த மொழியில் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கும், ஒரு செயலி தனக்குள்ளேயே சுய இயங்குதிறனைப் பெற்றிருப்பது அவசியம். அத்தகைய வசதி, யுனிகோட் முறைக்கு மட்டுமே உண்டு. தமிழில் உள்ள தரக் குறியீடுகளை ஆராய்ந்தால், அவற்றில் நியமமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய பண்புகளைக் கூடியளவில் கொண்டதும் யுனிகோட் மட்டுமே.

**சொந்த வீடு வேண்டும்!**

இப்போது பலரும் பரவலாக யுனிகோட் எழுத்துருவைப் பயன்படுத்தி வருகிறோம். இருப்பினும், இன்னும் யுனிகோட்டைப் பயன்படுத்தப் பின்னிற்போரும் ஆங்காங்கே இருக்கிறார்கள். யுனிகோட்டிற்குள் குடிபுகாதோர், இன்னும் வாடகை வீட்டில் காலம் தள்ளுகிறார்கள் என்கிறார்கள் தமிழ் இலத்திரனியல் உலக ஆய்வாளர்கள். நமக்கென்று ஒரு வீடு இல்லை, வீடு கட்ட வசதி இருந்தும், வாடகைக்காரர்கள் நகரவோ வாங்கிக் குடியேறவோ மறுக்கிறார்கள் என்பது அவர்களது வாதம்.

யுனிகோட்டில் தமிழுக்கென்று தனி இடம் ஒதுக்கப் பட்டுள்ளது. இதில் எப்படி வீடு கட்டினாலும், அது ஒரு தமிழரின் வீடு என்பதை கணினியும் இணையமும் உணர்ந்து கொள்ளும். தேவைப்படும் ஒரு தமிழ் எழுத்துரு இல்லை என்றால் வேறொரு தமிழ் எழுத்துருவைத் தானாகவே மாற்றிக் கொடுக்கும். அத்தகைய வசதிகளை, தற்போது புதிதாக வெளிவரும் இலத்திரனியல் மென்பொருட்களும் செயலிகளும் தன்னகத்தே சுயமாகத் தாங்கி வெளிவருகின்றன. எனவே, யுனிகோட் எழுத்துருவுக்குள் கடந்து செல்வது என்பது தமிழ் மொழியின் ஒரு கட்டாய அடிப்படை அம்சமாக, விதியாக மாறியிருக்கிறது என்பதே நிஜம்.

உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் உலாவிகள் (viewers) அனைவரும் வலைப்பக்கங்களை (Websites) அவர்கள் விரும்பும் மொழிகளில், தமிழ் மொழி உட்பட, தற்போது நேரடியாகப் பார்க்கவும் படிக்கவும் முடிகிறது. முன்னரெல்லாம், இணையத் தளங்களைத் திறந்தால், ஆங்கிலம், டொச், டச், பிரெஞ்சு, ஸ்பானியன், சீனம், ஹிந்தி, அரபுமொழி உட்பட, ஏராளமான சர்வதேச மொழிகளை, சாதாரணமாக அதே மொழியில் வாசிக்க வசதி இருந்தது.

அடுத்த இதழிலும் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## கனடாவில் நீங்கள் வீடு வாங்கலையா?

கனடாவில் நீங்கள் வீடு வாங்கிய அனுபவமுண்டா? எத்தனை வீடு வாங்கி விற்ற அனுபவமுண்டு? உங்களுக்கு உதவிய முகவர் யார்? எவ்வளவு கமிஷன் அவருக்கு வழங்கப்பட்டது?

இப்படியான விபரங்களை ரகசியமான முறையில் ஒரு நிறுவனம் விசாரணை செய்து வருகின்றது. ஏன் இந்த விசாரணை என்ற தகவலை அவர்கள் எவருக்கும் தெரிவிக்கவில்லை.

வங்கிகளில் தமிழர்கள் வீடு வாங்க வழங்கப்பட்ட கடன் சம்பந்தமான விசாரணையில் வங்கித்துறையினர் சிலர் அகப்பட்டதன் எதிரொலியே இது என்று கூறப்படுகின்றது. சில தமிழர்கள் வங்கி வேலையிலிருந்து நீக்கப்பட்டும் உள்ளனர்.

இது போன்று, தமிழர் சமூகத்தின் நற்பெயரைக் கெடுத்து வரும் பல்வேறு ஊழல் மோசடிகளை ஆதாரத்துடன் வெளிக்கொணர ஒரு பத்திரிகை தமிழில் விரைவில் வெளிவரவுள்ளதாக ஒரு அறிவித்தல் வந்துள்ளது.

'புரட்சி'கரமான இந்த ஏட்டினைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் சிலரே கொண்டுவர இருப்பதானது பலருக்கும் வயிற்றைக் கலக்கும் செய்தி!

## வேட்டியைக் காணவில்லை; துண்டு தான் தெரிகிறது!

மதிமுக அவுட்; இடதுசாரிகளும் அவுட்; அடுத்தது திருமாவளவன் அணி. மந்தி(ரி)க் கதிரை கேட்டுக் கத்தி தூக்குகின்றது காங்கிரஸ். இது தமிழக அரசியல் கூட்டணி நிலைவரம்!

அழகிரி, ஸ்டாலின், கனிமொழி, கயல்விழி (அழகிரியின் மகள்), செல்வி, தயாநிதி என்று ஒருவருக்கொருவர் குடும்பி பிடி சண்டை. இது குடும்ப அரசியல் நிலைவரம்!

'முது'கலைஞருக்கு ஏழரைச் சனியனும் அட்டமத்து வியாழனும் ஒன்று சேர்ந்து நடக்கிறது போலத் தெரிகின்றது என்று 'இள' விகடன் நக்கலடித்துள்ளது. ஒன்று, இரண்டு, மூன்று என்று துணைவிகளைக் கட்டியாண்ட மனிதர் வயது போன காலத்தில் குடும்பத்திலும் கூட்டணி நடத்த முடியாது, ஆட்சியிலும் கூட்டணி பேண முடியாது தவிச்சலடிக்கிறார்.

"பதவி, தோளில் போடும் துண்டு; கொள்கை, இடுப்பில் கட்டும் வேட்டி" என்ற அண்ணாவின் வரிகளை அடிக்கடி சொல்லி வந்த கலைஞர் மு.க, இன்று வேட்டியை கைநழுவ விட்டு, துண்டுடன் நிற்பது போலத் தெரிகின்றது!

## சிங்காரச் சீனாவுக்கு எண்சோதிடத்தில் நம்பிக்கை

மனித உரிமை மீறல்களை நடத்திக்கொண்டு கம்யுனிச ஆட்சி நடத்தி வரும் சீனா, ஒலிம்பிக் திருவிழாவை நடத்தி மண்ணுக்கும் விண்ணுக்கும் பாலம் அமைத்துச் சாதனை புரிந்துள்ளது.

கம்யூனிசத்தில் திளைத்திருக்கும் சீனாவுக்கு எண்சோதிடத்தில் அபார நம்பிக்கையுண்டு என்பதை ஒலிம்பிக் திருவிழா வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து விட்டது.

சீனா என்னும் நாட்டின் ஆங்கில எழுத்தின் கூட்டுத் தொகை என்ன தெரியுமா? 8. எட்டு என்றால் சக்தி, சவால், வெற்றி என்று அர்த்தமாம்.

ஒலிம்பிக் திருவிழாவை இந்த நூற்றாண்டின் எட்டாவது வருடத்து (2008), எட்டாவது மாதத்தின் (ஆகஸ்ட்), எட்டாம் திகதியன்று, எட்டு மணி எட்டு நிமிடத்துக்கு ஆரம்பித்தது.

இந்த வருட ஒலிம்பிக்கில் ஆகக்கூடிய 51 தங்கப்பதக்கங்களை சீனா வென்றது.

தங்கம் (51), வெள்ளி (21) வெண்கலம் (28) என்று எல்லாமாகச் சேர்த்துப் பெற்ற பதக்கங்களின் தொகை 100. ஆனால், இதன் கூட்டுத் தொகை எட்டாக அமையவில்லையே!

**உதாசனன் உலா விருந்து**

## நடைபவனிக்கு உதவிய பரோபகாரியே வருக!

இங்குள்ள யாழ்ப்பாணப் பாடசாலை ஒன்றின் சங்கம் பொதுநிதிக்காக நடைபவனியொன்றினை அண்மையில் நடத்தியது. கணிசமான நிதி சேர்ந்தது. இதனை வங்கியில் வைப்பிலிடச் சென்ற 'மத்திய' நிர்வாகிகளுக்கு அங்கு ஆச்சரியம் காத்திருந்தது.

அதிலிருந்த நூறு டாலர் தாள் ஒன்று 'கள்ளக்காசு' என்பதை வங்கி உத்தியோகத்தர் கண்டுபிடித்து விட்டார். அது எவ்வாறு இதற்குள் புகுந்தது என்பது தெரிந்ததால், சங்கத்தினர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தாராள மனசு கொண்டு, இந்த கள்ளக் காசை வழங்கிய அந்தப் பரோபகாரியை சங்க நிர்வாகிகள் தேடி அலைகின்றனர்.

## யாழ். உதயன் அதிபரின் கனடிய வருகையை.....

யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த 23 வருடங்களாக வெளிவரும் 'உதயன்' தினசரியின் அதிபர் திரு. சரவணபவன் கடந்த மாதம் இங்கு வருகை தந்திருந்தார். இவரது வருகையைத் தடுக்கவென பிரகிருதி ஒன்று எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை.

விமான நிலையத்தில் நான்கு மணி நேரம் விசாரித்த பின்னர் இவரை உள்ளே வர அனுமதித்தனர் அதிகாரிகள். இப்படியான ஊத்தை வேலைகள் செய்வதில் சிலருக்குப் பரம திருப்தி!

## சிறீலங்கா அரசின் 1000 ரூபா நாணயக் குற்றி

சிறீலங்கா அரசினது மத்திய வங்கி ஆயிரம் ரூபா நாணயக் குற்றிகளைப் புழக்கத்துக்கு விட்டுள்ளது. ஆயிரம் ரூபா என்றதும் வாயைப் பிளக்க வேண்டாம். கனடிய டாலரில் இதன் பெறுமதி பத்து டாலர் மட்டுமே!

தற்போது நூறு கனடிய டாலர்கள் சிறீலங்காப் பணத்தில் பத்தாயிரம் டாலர்களுக்கும் அதிகம். அங்கு ஆயிரம் ரூபா என்பது ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு ஒரு வேளை சாப்பாட்டுக்கே போதாது என்றால் பாருங்களேன்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடாவில் 4 மில்லியன் ஆட்களுக்கு குடும்ப வைத்தியரில்லை

கனடாவில், 12 அல்லது மேற்பட்ட வயதுடைய ஏறத்தாழ 4.1 மில்லியன் மக்கள் தமக்கென ஒரு குடும்ப வைத்தியர் இல்லாமல் வாழ்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது. 2007 ஆண்டு கனடிய சமூக சுகாதார சேவைகள் மையம் மேற்கொண்ட ஆய்வின்படி இவர்களில் 78% ஆனோர் தமது வைத்திய தேவைகளுக்காக வேறு இடங்களை அணுகுகிறார்கள் எனத் தெரிகிறது. இதில் 64% ஆனோர் walk-in clinic களுக்குச் செல்வதாகவும், 12% ஆனோர் வைத்தியசாலைகளிலுள்ள அவசர சிகிச்சைப் பிரிவுக்குச் செல்வதாகவும், 10% ஆனோர் சமூக சுகாதார மையங்களுக்குச் செல்வதாகவும் தெரிகிறது. மிகுதி 14% ஆனோர் தொலைபேசி மருத்துவ சேவையைப் பாவிப்பதாகவும், மருத்துவமனைகளிலுள்ள வெளிநோயாளர் பிரிவுக்கும், வைத்தியர்களின் அலுவலகங்களுக்கும் செல்வதாகவும் கண்டறிந்துள்ளனர்.

## தகவல் தொழில்நுட்பத்தில் பெண்களின் வரவு குறைகிறது

கம்பியூட்டர் வேர்ல்ட் சஞ்சிகையின்படி, கம்பியூட்டர் விஞ்ஞானத்தில் மேற்படிப்பை தேர்வு செய்யும் பெண்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாக அறியப்படுகிறது. 2000 ஆண்டிற்கும் 2005 ஆண்டிற்கும் இடையில் 70 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. 2006 ஆண்டில் ஆக 15 வீதமானவர்களே கம்பியூட்டர் விஞ்ஞானத்திற்கான விசேட தர பரீட்சைகளில் தோற்றியுள்ளனர். மற்றைய எந்த பிரிவுக்கான விசேட தர பரீட்சைகளிலும் இதுவே குறைவான தொகையாகும். 2007 ஆண்டில் வழங்கப்பட்ட எல்லா கம்பியூட்டர் விஞ்ஞான கல்விக்கான பட்டங்களிலும், 19 வீதத்தினை மட்டுமே பெண்கள் பெற்றுள்ளனர்.

Forbes சஞ்கையின் ஆய்வின்படி, மற்றைய எல்லாக் கல்வித் துறைகளையும்விட, கல்வித் தகைமையுடன், அனுபவம் கூடுகையில் அதி உயர் வருமானத்தைத் தரும் முதலாவது துறையாக கணினித் துறை தெரிவு செய்யப்பட்டிருப்பதை பெண்கள் கவனிக்கவும்.



றஞ்சி திரு

## சின்னச் சின்ன தகவல்கள்

பிளாஸ்டிக் போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிநீர் விநியோகத்தின் எதிர்காலம் பற்றிய முடிவினை ரொறன்ரோ நகரசபை நவம்பர் மாதத்தில் எடுக்கவுள்ளது. வருடமொன்றுக்கு 100 மில்லியன் வெற்றுக் குடிநீர்ப் போத்தல்களில் 65 மில்லியன் மட்டுமே மீள்பாவனைக்குச் செல்கின்றன. மிகுதிப் போத்தல்கள் மண்ணுடன் சேர்வதால் ஏற்படும் சூழல் மாசடைதலைத் தடுக்க தீவிரமாக ஆலோசித்து வரும் ரொறன்ரோ நகரசபை சில தீர்க்கமான முடிவுகளை எடுக்கவுள்ளது.

'மெட்ரோ பாஸ்' வைத்திருக்கும் வாகனச் சொந்தக்காரர்கள், நகரிலுள்ள 19 சப்வே வாகனத் தரிப்பு நிலையங்களிலும் இலவசமாகத் தமது வாகனங்களை நிறுத்தும் சலுகை இந்த வருடத்துடன் முடிவுக்கு வருகின்றது. அடுத்தாண்டு ஆரம்பத்திலிருந்து, நாளொன்றுக்கு இவர்களிடமிருந்து 3 முதல் 6 டாலர் கட்டணமாக அறவிடப்படும். ஆனால், பிற்பகல் 3 மணிக்குப் பின்னரும், வார இறுதி நாட்களிலும, விடுமுறை தினங்களிலும் இப்போதுள்ளது போன்று கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது.

ஆபத்தான குற்றவாளிகளை விடுதலை செய்யும்போது, புதிய வகையில் அவர்களைக் கண்காணிக்க கனடிய மத்திய அரசு தீர்மானித்துள்ளது. இவர்களது நடமாட்டங்களை பாதுகாப்புத் துறையினருக்குத் துல்லியமாக தெரியவைக்கும் காப்புப் போன்ற அணியொன்று (bracelet) இவர்களின் கரமொன்றில், இறுக்கமாகப் பொருத்தப்படும். இவர்கள் எங்கிருக்கின்றனர், என்ன செய்கின்றனர் என்னும் விபரங்களை இக்காப்பு தெரியப்படுத்தும். பிரிட்டன் உட்பட்ட பல மேற்கு நாடுகளில் இந்த முறை ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபையின் கீழுள்ள 23 பாடசாலைகளின் நீச்சல் தடாகங்களும், முன்னர் அறிவிக்கப்பட்டது போல இந்தக் கல்வியாண்டில் மூடப்படமாட்டாது. மாகாண அமைச்சு நிதி வழங்கியுள்ளதால், 2009 கல்வியாண்டு முடியும் வரை (2009 ஜுன் மாதம் வரை) இவை இயங்குமென்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்குப் புதிதாக நீச்சல் பயிற்றுனர்களும், பராமரிப்பாளர்களும் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

ஆண் பிறப்புறுப்பு புற்று நோய் (prostate cancer) மிக வேகமாக அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வருடமொன்றுக்குச் சுமார் 23,000 பேர் இந்நோயினால் மரணமாகி வருகின்றனர். அத்துடன் புதிதாக வருடமொன்றுக்கு ஏறத்தாழ 70,000 பேர் இந்தப் புற்று நோயினால் பீடிக்கப்பட்டு வருகின்றனர்.

Maple Leaf Foods நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் இறைச்சி வகைகளை உட்கொண்ட பதினொரு பேர் லிஸ்டீரியோசிஸ் என்னும் பக்டீரியாவினால் பீடிக்கப்பட்டு கடந்த மாதம் ரொறன்ரோவில் மரணமாகியுள்ளனர். மேலும் 26 பேர் இந்நோயினால் பீடிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து மேற்படி உணவு நிறுவனம் மூடப்பட்டு, விற்பனை நிலையங்களுக்குச் சென்றிருந்த இறைச்சி வகைகள் உடனடியாக மீளப்பெறப்பட்டன.

ஒன்ராறியோவின் புதிய போக்குவரத்துச்சட்ட விதிகளை மீறி, குறிப்பிட்ட வீதி வேகத்தை விட ஐம்பது கிலோ மீட்டர் வேகத்துக்கும் மேலாக ஓடிய 5351 வாகன சாரதிகள் கடந்த 12 மாதங்களில் தண்டிக்கப்பட்டனர். இவர்களது வாகன சாரதி அனுமதி ஒரு வாரத்துக்கு இடைநிறுத்தப்பட்டு தண்டமும் விதிக்கப்பட்டது. இவர்களுள் ஐயாயிரம் பேர் வரையானவர்கள் ஆண்கள். பெரும்பாலானவர் களும் 21 வயதுக்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொ. கனகசபாபதி
மகாஜன முன்னாள் அதிபர்

# அதிபர் பிரயாணம் - 3

**கல்வி ஆலோசகர் இராசா வந்தார்:**

இப்பாடசாலையில் சமூகக்கல்வி போதித்தவர் திருமதி பொன்னம்பலம். அவர் இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரி. உள்ளூர்வாசியும் கூட. பாவம், அவருக்கு மகப்பேற்றின் போது ஏற்பட்ட பாரிசவாதம் காரணமாக வலப்பக்கக் காலும் கையும் பாதிக்கப் பட்டுவிட்டது. ஆனால் குரலிலோ ஏனைய செயற்பாடு களிலோ எவ்வித பாதிப்பும் இல்லை. மாணவர்களுக்கு அவர் குறைபாடு அனுகூலமாகி விட்டது. வகுப்பு ஒழுங்காட்சி பெரிதளவு பாதிக்கப்பட்டது. இதற்கு என்ன செய்வது என எண்ணிய பின் திரு காசிப்பிள்ளையிடம் சொல்லி நேரசூசியில் சிலமாற்றங்கள் செய்ததுடன் வகுப்பறைகளின் ஒழுங்குகளிலும் மாற்றம் செய்தேன். திருமதி பொன்னம்பலம் கற்பிக்கும் வகுப்புகள் எனது அலுவலகத்தின் நேரடிப் பார்வைக்கு இலக்காக அமைந்தன. அதனால் மாணவர்கள் யாராவது வகுப்பில் குழப்படி செய்தால் நான் அவர்களைக் கண்டு தண்டித்தேன். வகுப்புகள் ஒழுங்காய்ப் போய்க் கொண்டிருந்தன.

ஒரு நாள் காலை சுன்னாகத்தினைச் சேர்ந்தவரும் எனக்குப் பரிச்சயமான வரும் ஓய்வு பெறுவதற்கு அண்மை வயதில் உள்ளவருமான வட்டார கல்வி ஆலோசகர் திரு இராசா பாடசாலை வந்தார். பாடசாலை நடத்துவது பற்றி எனக்குச் சில ஆலோசனைகளை நட்பு ரீதியாகத் தந்த பின்னர் தான் வந்த நோக்கத்தினைக் கூறினார். திருமதி பொன்னம்பலத்தின் கற்பித்தல் திருப்திகரமானதாக இல்லை எனத் திருவாளர் அம்பலவாணர் அறிவித்தமை யால் தான் ஏற்கனவே இரண்டு முறைகள் வந்து அவரது கற்பித்தலை அவதானித்ததாகவும் இரண்டு முறை களிலும் தனக்கும் திருப்தி இல்லாமல் இருந்ததாகவும் இது இறுதியாகத் தான் பார்க்க வந்ததாகவும் கூறினார். 'இம்முறையும் திருப்தியில்லை என்றால் என்ன நடக்கும்' என வினவினேன். 'ஒன்றில் அவரை வேலையை விட்டு நீக்க வேண்டும் அல்லது ஏதாயினும் சிறிய பாடசாலைக்கு இடமாற்றம் செய்ய வேண்டும்' என்றார். 'நான் எனது அபிப்பிராயத்தினைக் கூறட்டுமா' என்றேன். 'அவரை வேலையில் இருந்து நீக்குவது கொடுமை. இன்னொரு பாடசாலைக்கு மாற்றுவதாயின் அப்பாடசாலையிலும் இதே பிரச்சினை எழலாம் தானே' என்றேன். அப்போ நீர் என்ன சொல்கிறீர் என்றார். என்னைப் பொறுத்த மட்டிலே ஆசிரியையுடைய கற்பித்தல் திருப்திகரமாக உள்ளது என்றேன். அது எப்படி? என்றார். ஆசிரியர் கற்பிக்கிறார். அவர் சொல்ல வேண்டியதைச் சொல்கிறார். குறைபாடு எங்கே என்றால் வகுப்பில் ஒழுங்காட்சி பேணப்படாமையே. ஆகவே சற்றுக் குழப்படியான வகுப்புக்களை என் கண்காணிப்பில் வைத்துள்ளேன். தேவையெனில் பாருங்கள் என்றேன். தேவையில்லை. உமக்குத் திருப்தி என்றால் சரி எனக் கூறியவர் முன்னைய அதிபர் ஆசிரியையின் கற்பித்தல் திருப்தியில்லை என்று கூறியுள்ளார். ஆனால் தற்போதைய அதிபர் திருப்திகரமாக உள்ளது என்கிறார் எனப் பதிவேட்டில் எழுதிவிட்டுச் சென்றுவிட்டார். சிறிது காலத்தில் அவர் ஓய்வு பெற்றுவிட்டார். அவரது இடத்தில் திரு. இராசநாயகம் கல்வி அதிகாரியாக வந்தார். அவர் ஹாட்லிக் கல்லூரியில் விஞ்ஞான ஆசியராக இருந்தவர். நாம் ஏறக்குறைய ஒரே வயதுடையவர்கள். அவரிடமும் அந்த ஆசிரியை பற்றி நான் ஏற்கனவே இராசாவிடம் கூறியதையே கூறினேன். திரு. இராசநாயகம் எந்தப் பிரச்சினையையும் எழுப்பவில்லை.

நான் அப்பாடசாலையை விட்டுப் போன பின்னர் திருமதி பொன்னம்பலத்திற்கு தொடர்ந்தும் அதே பிரச்சினை ஏற்பட்டு ஒரு சிறு பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார் என அறிந்தேன்.

**பாலசுப்பிரமணியத்துடன் ஒருவர் வந்தார்:**

அரசன் எப்படியோ குடிமக்கள் அப்படியே என்பார்கள். நான் பாடசாலையில் ஒழுங்கு கட்டுப்பாடு கொண்டு வருவதற்காகச் சற்றுக் கூடுதலாகப் பிரம்பினை உபயோகிப்பதைக் கண்ட ஆசிரியர்களும் என்னைத் தாரா-ளமாகப் பின்பற்றினர். பாடசாலை சற்று ஒழுங்காக நடைபெறத் தொடங்கிவிட்டது என ஊராரும் பேசத்தொடங்கி விட்டார்கள். கொஞ்சம் சலசலப்பும் எற்படாமல் இல்லை. ஒரு நாள் காலை, பாடசாலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரம். திருவாளர் பாலசுப்பிரமணியத்துடன் ஒருவர் பாடசாலை வந்தார். எனது அலுவலகத்திற்குள் வந்தவர்களை ஆசனங்களில் அமரச் சொன்னேன். பாலசுப்பிரமணியம் ஏழாலை கிராமச் சங்கத் தலைவராகவும், மரண விசாரணை அதிகாரியாகவும் பணியாற்று பவர். திரு. அம்பலவாணருடன் கருத்து முரண்பாட்டினால் அவரை பாடசாலையில் இருந்து மாற்ற வேண்டும் என உழைத்தவர்களின் முன்னோடி. ஆனால் நான் பதவி ஏற்ற பின்னர் பாடசாலையில் இதற்கு முன் ஒருபொழுதும் வந்தவரல்ல. பாடசாலை நிர்வாகத்தில் எந்தவிதமான இடைஞ்சலும் கொடுக்கவேயில்லை. அவரது குழந்தைகள் பாடசாலையில் கல்வி கற்றனர். வந்த விசயம் என்ன என வினவினேன். திரு பாலசுப்பிரமணியம் தன்னுடன் வந்தவரைப் பார்த்தார். அவர் சற்றுப் பீடிகை போட்டபின் சங்கதியைக் கூறினார். தனது மகனுக்கு மரவேலை ஆசிரியர் முதல் நாள் சற்று வசமாக அடித்துவிட்டார் என்றதே அவரது குற்றச்சாட்டு. இதற்கெல்லாம் நீங்கள் வந்திருக்கத் தேவையில்லையே. உங்கள் பிள்ளையின் முன்னேற்றத்திற்காகத்தானே ஆசிரியர் அடித்தார் என்றேன். அடிக்கலாம், ஆனால் காயம் வரும்படி அடிக்கப்படாது; அதனால்தான் நான் வந்தேன் என்றார். அப்படிக் காயம் வர அடித்திருந்தால் அது ஆசிரியர் தவறுதான். நான் ஆசிரியரிடம் இது பற்றிப் பேசுகிறேன். இனிமேல் இவ்விதமாக நடைபெறாமல் பார்த்துக் கொள்கிறேன் என்றேன். அவர்கள் அத்துடன் எழுந்து போவார்கள் என எண்ணினேன். அவர்கள் எழுந்து போவதாக இல்லை. வேறு ஏதேனும் உண்டா என்றேன். "இல்லை, நான் அந்த ஆசிரியருடன் பேச வேண்டும் சற்றுக் கூப்பிடுகிறீர்களா" என்றார் தகப்பன். எனக்குக் கோபம் உச்சத்திற்குச் சென்றது. "இதோ பாருங்கள். இது எனது பாடசாலை. இங்கு நான் நினைத்தபடி தான் பாடசாலை நடக்கும். ஆசிரியர் வகுப்பில் உள்ளார். அவரை அழைப்பதற்கில்லை. நீங்கள் ஒரு குற்றச் சாட்டினைச் சொன்னீர்கள். அப்படி நேர்ந்திருந்தால் அது ஆசிரியரின் தவறு எனவும் கூறியுள்ளேன். அதுபற்றி விசாரிப்பதாகவும் சொல்லியுள்ளேன். நான் அதனைச் செய்வேன். நீங்கள் இதில் தலையிட நான் விடமாட்டேன். நீங்கள் நீதிமன்றத்தில் போய் வழக்குப் போட்டாலும் நான் தான் வருவேன். நீங்கள் என்ன வேண்டுமென்றாலும் செய்யுங்கள். இனிமேல் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. நீங்கள் போகலாம்" என்றேன். பாலசுப்பிரமணியம் அவரையும் அழைத்துக் கொண்டு போய்விட்டார்.

எனக்குச் சற்று வருத்தமாகத் தான் இருந்தது. திரு பாலசுப்பிரமணியத்தின் மனதினை நோகடித்து விட்டேனோ என எண்ணினேன். ஆனால் நான் யாரென்பதைக் கிராமவாசிகளுக்கு அறிவுறுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பம் இது. இதனைத் தவறவிட்டால் பாடசாலை நடத்துவது கஷ்டமாகப் போய்விடும். கிராமத்தவரின் தலையீடு இருக்காது என்பது உண்மை. அதன் பிறகு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு பெற்றோராவது பாடசாலைக்கு ஏதாயினும் பிரச்சினையுடன் வரவில்லை என்பது உண்மை.

அன்று மாலை ஈருருளியில் வீடு சென்று கொண்டிருந்தேன். வழியில் திரு பாலசுப்பிரமணியம் நின்று கொண்டிருந்தார். என்னைப் பார்த்துப் புன்னகைத்தபடி ஈருருளியை நிறுத்துமாறு கைகாட்டினார். நான் நிறுத்திய பொழுது அருகே வந்தவர். என்னை மன்னித்து விடுங்கள் என்றார். எதற்கு என்று நான் கேட்டபொழுது. நான் கிராமசபைத் தலைவன். கொஞ்சம் அரசியலிலும் உள்ளேன். அவர்கள் யாபேரும்

(33ஆம் பக்கம் வருக)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிங்கள அராஜகத்தை வெளிப்படுத்தும் கவனயீர்ப்பு




தமிழீழத்தில் சிங்கள அரசு நடத்திவரும் மனிதாபிமானமற்ற தாக்குதல்களை வெளியுலகுக்கு அம்பலப்படுத்தும் வகையிலான தெருவீதிக் கவனயீர்ப்பு நிகழ்ச்சிகளை கனடியத் தமிழ்ப் பெண்கள் அமைப்பினர் ரொறன்ரோ பெருநகரின் பல இடங்களில் கடந்த மாதம் இரண்டு நாட்கள் நடத்தினர். சொஞ்சோலைச் சிறார் வளாகத்தினுள் ஐம்பத்திமூன்று மாணவிகள் வான்குண்டு வீச்சில் படுகொலை செய்யப்பட்ட இரண்டாவதாண்டு பூர்த்தியை முன்னிட்டு இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கவனயீர்ப்பின் சில காட்சிகளை இங்கு காணலாம்.






# 'வானம்பாடி'களின் 'ஊர் போகும் மேகங்கள்'




கனடாவின் புகழ்பூத்த 'வானம்பாடி'கள் இசைக் குழுவினரின் 'ஊர் போகும் மேகங்கள்' இசை நிகழ்ச்சி கடந்த மாதம் 23ஆம் திகதி ஏஜக்ஸ் நகரில் நடைபெற்றது. சிறீலங்கா அரசின் கொடூர பயங்கரவாதத்தினால் அல்லலுறும் தாயக உறவுகளின்துயர் துடைக்கும் பணிக்கானதாக இந்நிகழ்ச்சி ஏற்பாடானது. 'இராஜ கோபுரம் எங்கள் தலைவன்' என்னும் எழுச்சிப் பாடலுடன் ஆரம்பமான இசை நிகழ்ச்சி மண்டபம் நிறைந்திருந்த மக்கள் மத்தியில் இடம்பெற்றது. இதன் சில காட்சிகள் இப்பக்கத்தில்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயப் பேரவையின் திருமுறை மாநாடு





ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையின் திருமுறை மாநாடு கடந்த மாதம் 9ஆம் 10ஆம் திகதிகளில் ஸ்காபரோவிலும், 24ஆம் திகதி மொன்றியலிலும் சிறப்பாக நடைபெற்றது. முதன்மை விருந்தினராக சித்தாந்த கலாநிதி சு. சண்முகவேலும், சிறப்பு விருந்தினர்களாக பண்டிதர் சி. அப்புத்துரை, இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் இ. இராமநாதன் ஆகியோர் கலந்து சிறப்புரையாற்றினர். பேரவைத் தலைவர் கவிநாயகர் வி. கந்தவனம் தலைமையில் மாநாடு இடம்பெற்றது. மாநாட்டில் எடுக்கப்பட்ட சில படங்களை இங்கு காணலாம்.














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சேக்கம்' வெள்ளி விழா









ரொறன்ரோவின் மூத்த தமிழர் சேவை அமைப்புகளில் ஒன்றான 'சேக்கம்' தனது 25வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்ட வெள்ளி விழாவினைக் கடந்த மாதம் ஸ்காபரோவில் பல்கலாசார விழாவாக நடத்தியது. அமைப்பின் நீண்ட காலத் தொண்டர்களில் ஒருவரான கலாநிதி த. வசந்தகுமாரின் வரவேற்புரையுடன் விழா ஆரம்பமானது. விழாவில் சில காட்சிகளை ஒளிப்படங்களாக இங்கு காணலாம்.





# யாழ். உதயன் நிர்வாகியின் கனடா வருகை




யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த 23 ஆண்டுகளாகப் பல்வேறு சவால்களையும் சந்தித்தவாறு வெளிவரும் 'யாழ். உதயன்' தினசரிப் பத்திரிகையின் நிர்வாக இயக்குனர் திரு. ஈ. சரவணபவன் மூன்று வார விஜயத்தை மேற்கொண்டு கடந்த மாதம் கனடா வந்திருந்தார். இங்குள்ள பல்வேறு அமைப்புகளின் பிரமுகர்கள் உட்பட, முக்கிய ஊடகத்துறையினரையும் இவர் சந்தித்து இலங்கையில் ஊடகத்துறையினர் சந்தித்துவரும் நெருக்கடிகளை விளக்கிக் கூறினார். கனடியத் தமிழர் பேரவை ஏற்பாடு செய்த சிறு சந்திப்பரங்கமொன்றில் இவர் உரையாற்றியபோது எடுக்கப்பட்ட படம் இங்கு பிரசுரமாகியுள்ளது. யாழ். உதயன் பத்திரிகையை ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் வாரப் பதிபபாகக் கொண்டுவர ஏற்பாடுகள் நடைபெறுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுப்பிட்டிப் பாடசாலைகளின் 'வானவில்' விழா





உடுப்பிட்டிப் பாடசாலைகளின் 'வானவில்' இருபதாவது ஆண்டுவிழா கடந்த மாதம் ஸ்காபரோவில் நடைபெற்றது. தாயகப் பாடசாலைகளின் பெயரால் கனடாவின் உருவான அமைப்புகளில் மூத்ததாகவும், இங்கு இடம்பெறும் வருடாந்தக் கலை விழாக்களில் முதன்மையானதாகவும் பெயர்பெற்ற 'வானவில்' வழமையான தரத்துடனும், சிறப்பான ஒழுங்கமைப்புடனும் இடம்பெற்றது. இவ்வாண்டின் நிர்வாகக் குழு திரு. பாலச்சந்தரன் (பாலி) தலைமையில் இயங்கி வருகின்றது. 'வானவில்'லின் சில நிகழ்ச்சிகளை இங்கு பார்க்கலாம்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொன்றியல் 'இருசு' பத்திரிகையின் மூன்றாவது ஆண்டு வைபவம்








மொன்றியல் 'இருசு' பத்திரிகையின் மூன்றாவது ஆண்டு வைபவம் கடந்த மாதம் 17ஆம் திகதி மொன்றியல் நகரின் Jean-de-Brebauf அரங்கில் நடைபெற்றது. வான்மதி நுண்கலைக்கூட மாணவர்கள், மதுராலயா நாட்டியப்பள்ளி மாணவர்கள், அமிர்தாலயா நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் ஆகியோரின் நடனங்களுடன், கலைப்பிரியர்களின் 'புரட்சி நடனம்', சிவாஜி மகேந்திராவும் அவரது புதல்வரும் வழங்கிய பாடலுக்கு நடிப்பு, கானமும் காட்சி, கே. ரி. குமார் மற்றும் பாலா வழங்கிய பல்சுவைக் கதம்பம் ஆகிய கலைநிகழ்ச்சிகள் இங்கு இடம்பெற்றன. ரொறன்றோவின் 'சுப்பர்சன்ஸ்' குழு வழங்கிய மெல்லிசை மழை இறுதியில் இடம்பெற்றது. 'தமிழர் தகவல்' முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் முதன்மை விருந்தினராகப் பங்கேற்று சிறப்புரையாற்றினார். மொன்றியல் 'முகவரி' வெளியீட்டாளர் திரு. சுதாவினால், 'இருசு' பத்திரிகை வாராந்தம் வெளியிடப்பட்டு வருகின்றது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இது உங்களுக்கு...!




வீடு வாங்கும் போதோ அல்லது விற்கும் போதோ
இந்த சன்மானம் உங்களுக்கு உறுதியாகிறது!
(நேரடியாக தொடர்பு கொள்பவர்களுக்கு மாத்திரமே)

HomeLife Higher Standards

**HomeLife/ Future Realty Inc.**
Realtor Member
262 Markham Road
Scarborough, ON M1J 3C5





# கீர்த்தனன் திவ்யராஜனின் மிருதங்க அரங்கேற்றம்



செல்வன் கீர்த்தனன் திவ்யராஜனின் மிருதங்க அரங்கேற்றம் கடந்த 24ஆம் திகதி ஞாயிறு மாலை 6 மணிக்கு ஆமேனியன் யுத் சென்ரறில், மண்டபம் நிறைந்த ரசிகர்களுடன் வெகு சிறப்பாக நடந்தது. மேடையில் செல்வன் கீர்த்தனுடன் திரு.ஹரிஸ் கணபதி பாடுவதையும், திரு. விட்டில் ராமமுர்த்தி வயலின் இசைப்பதையும், டாக்டர் சிறிராம் கெஞ்சிரா வாசிப்பதையும் அத்துடன் செல்வன் கீர்த்தனனுக்கு, அவரின் குரு வித்துவான் தஞ்சாவூர் திரு. எஸ் கணபதி அவர்கள் பட்டயம் வழங்குவதையும், தலைமை விருந்தினர் பேராசிரியர் அனந்தநாராயணன், சிறப்பு விருந்தினர் திரு. க. நவம் ஆகியோர் உரையாற்றுவதையும் இங்கு காணலாம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணின் பொழுது - 6

சிவாஜினி பாலராஜன்

## கலையுடன் இணைந்த கடதாசி - வெட்டி ஒட்டுதல் (Decoupage)


கடதாசியை வெவ்வேறு வடிவங்களில் அல்லது அமைப்புகளில் வெட்டி ஒரு பொருளின் மீது ஒட்டி அலங்கரிக்கும் முறை decoupage எனப்படும். இக்கலை இப்போது உலகெங்கிலும் பாவிக்கப்பட்டு பிரபலமாகி வருகிறது. Decoupage என்பது பிரெஞ்சு சொல்லான டிகுப்பர் என்பதிலிருந்து வந்தது. டிகுப்பர் என்றால் வெட்டியெடு என்று பொருள். இக்கலைக்கு ஒரு கட்டுப்பாடோ வரையறையோ கிடையாது. கலைஞனின் சிந்தனைத் திறன் தான் இக்கலையை பூரணப்படுத்த முடியும்.



நிறக் கடதாசிகள், செய்தித்தாள்கள், சஞ்சிகைகளில் வரும் படங்கள், பரிசுப் பொருட்கள் சுற்றுவதற்கான கடதாசிகள் (gift wrap) அல்லது சுவரில் ஒட்டுவதற்கு விற்கப்படும் wall paper எனப்படும் கடதாசிகளிலுள்ள படங்களை வெட்டி ஒரு பொருளின் மீது நிறந்தீட்டியது போல் வரும்படி ஒட்டுவது தான் decoupage எனப்படும். இதற்கென படங்கள் கூட கைவினைப் பொருட்கள் செய்யும் கடைகளில் விற்பனை-யாகின்றன. இப் படங்களை கதிரை, மேசை, பெட்டிகள், போத்தல்கள் அல்லது தகரப் பெட்டிகளிலும் ஒட்டலாம். இந்த decoupage ஐ கண்ணாடியின் உள்புறம் கூடச் செய்யலாம். அதாவது உங்கள் வரவேற்பறையில் உள்ள மேசை (center table) கண்ணாடியால் ஆனதாயின் அந்த மேசையின் கண்ணாடியின் உள்புறமாக இவ்வாறு செய்யும் போது வெளிப்புறம் இருந்து பார்க்கும் போது மிகவும் விநோதமாக இருக்கும். அதுமட்டுமல்ல மிகவும் பழசாக இருக்கும் ஒரு மரத்தாலான மேசையை paint அடித்து புதிதாக்குவது மிக மிக கடினம். ஆனால் இவ்வாறு decoupage செய்வதால் அதனை அழகான மேசையாக செய்து விடலாம். முட்டைக் கோதுகளை சேகரித்து அவற்றை நன்றாக சவர்க்கார நீரினால் கழுவிச் சுத்தப்படுத்திவிட்டு அவற்றின் மேல் கூட இந்த decoupage ஐ செய்யலாம். முப்பரிமாண அமைப்பில் கூட இவற்றை செய்து கட்டம் (frame) போட்டு அழகாக சுவரில் மாட்டலாம். இவ்வாறு முப்பரி-மாண அமைப்பில் ஒட்டும் போது ஒரே படத்தில் குறைந்தது மூன்று பிரதிகளாவது தேவை.



Decoupage செய்வதற்கு தேவையான பொருட்கள்.
ஒட்டுவதற்குரிய படம் கதிரை அல்லது எதில் நீங்கள் படத்தை ஒட்ட வேண்டுமோ அந்தப் பொருள் மொட் பொட்ஜ் எனப்படும் பசை. (சாதாரண ஒட்டும் பசையை விட இது கொஞ்சம் வித்தியாசமானது. சாதாரண பசையை விட மெல்லியதன்மை கொண்டிருந்தாலும் இதில் ஒரு மினுங்கும் தன்மையும் அத்துடன் கூடிய ஒட்டும் தன்மையும் கொண்டது.) ஒரு பிறஸ்




ஒரு மரத்துண்டை எடுத்து (இந்த மரத்துண்டை நீங்கள் walmartல் வாங்கிக் கொள்ளலாம்.) அதனை மிகவும் கவனமாக துடைத்துத் துப்பரவாக்கவும். பின்னர் அதன்மேல் ஒட்டவேண்டிய படத்தை மொட் பொட்ச் போட்டு ஒடவும். பின்னர் அந்த ஒட்டிய படத்தின் மேல் மேலும் மொட் பொட்சைப் போட்டுவிட்டு அதன்மேல் திரும்பவும் பிரசினால் நன்றாகத் தடவவும். படம் நன்றாகக் காய்ந்த பின்னர் அதன் மேல் வார்ணிசை பூச வேண்டும். இவ்வாறு பழசாகிப் போன மேசையைக் கூட புத்திதாக மாற்றலாம். இத்துடன் இரு படங்கள் இணைத்திருக்கிறேன். இவை இரண்டும் இந்த முறையில் தான் செய்தேன். நீங்களும் செய்து பார்க்கலாம்.

HERITAGE
Education Funds
**RESP SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**


உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதய நல நிவாரணம் - Save a Heart

*Improved heart treatment for the Northern Province residence by establishing a Cardiac Catheterization Unit at the Jaffna Teaching Hospital*

Project to be Coordinated by the Jaffna Hospital Development Association

அண்மையில் கடைாவுக்கு விஜயம் செய்த Dr. Raviraj இடமிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை (Jaffna Teaching Hospital) பற்றிய சில வார்த்தைகள்:

இலங்கையின் வடபுலத்திலுள்ள ஒரேயோரு மூன்றாம் உயர்நிலை வைத்தியசாலை (Tertiary Hospital) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை என்பது நன்கறிந்ததாகும். இவ்வைத்தியசாலை 1.6 மில்லியன் மக்களுக்கு சேவை வழங்குகிறது. யாழ் போதனா வைத்தியசாலை, நோயாளிகளின் சிகிச்சை மட்டுமன்றி மருத்துவ மாணவர்களினதும் தாதிய மாணவர்களினதும் கற்கை நெறிகளையும், நடத்தி வருகின்றது. இக்கட்டான நிலையில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை ஊழியர்கள் அனைவரும் தங்களால் இயன்ற மிகச் சிறந்த சேவையை நோயாளிகட்கு நல்கி வருகின்றனர் என்பதில் ஐயமில்லை.

வடபகுதி மக்கள் பலமுறை அகதிகளாக்கப்பட்ட நிலை சகலரும் அறிந்ததே. வடபகுதி மக்கள் மட்டுமன்றி யாழ் போதனா வைத்தியசாலையும் கடந்த இரு தசாப்தங்களில் அகதியாக்கப்பட்டதும் உண்மையே. ஒரு முறை மானிப்பாய் வைத்தியசாலைக்கும் மறுமுறை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கும் இடம் மாற்றப்பட்டது. வடபகுதி மக்கள் போர்க்கால சூழ்நிலையாலும் போக்குவரத்து வசதியின்மையாலும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளாலும் அல்லல்படும் பொழுது சுகாதார சேவைகளை நிவர்த்தி செய்வது தமிழராகிய எங்கள் எல்லோரினதும் கடமையாகும். யாழ் போதனா வைத்தியசாலையில் தற்பொழுது 21 விசேட வைத்திய நிபுணர்களும், ஏறத்தாழ 200 வைத்தியர்களும் கடமையாற்றுகின்றனர். இவ்விருபத்தொரு விசேட வைத்திய நிபுணர்களில் 18 நிபுணர்கள் யாழ் மருத்துவபீடத்தினால் உருவாக்கப்பட்டவர்கள் என்பது பெருமைப்படக்கூடிய விடயமாகும்.

யாழ் போதனா வைத்தியசாலையில் சில பிரிவுகள் விசேட நிபுணத்துவமற்று காணப்படுகின்றன. நரம்பியல் பகுதி, நோய்க்குறியாய்வுத் துறை (Pathology Department) என்பன இதற்கு எடுத்துக்காட்டாகும். சில பிரிவுகளில் சிறந்த நிபுணர்களிருந்தும் சில உபகரணங்கள் இன்மையால் இவர்களின் சேவையை மக்களுக்கு வழங்க முடியாதுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக இருதயக்கூற்றுப் பிரிவு (Cardiology Unit) அமைந்துள்ளது. இக்காரணத்தினால், யாழ் போதனா வைத்தியசாலை "கனடிய தமிழ் வைத்திய நிறுவனத்தை" (Canadian Medical Dental Development Association) நாடி, இருதய சிகிச்சை/ஆய்வுக்குரிய (Cath Lab) உபகரணங்களைத் தந்துதவுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வுபகரணங்களினால் யாழ் நோயாளிகள் கொழும்பு போதனா வைத்தியசாலைக்கு இருதய சிகிச்சை/ஆய்வை நடத்துவதற்குச் செல்லும் இடர்களையும் உயிர் இழப்புக்களையும் தவிர்க்க முடியும். 7-10 வரையான இருதய நோயாளிகள் ஒவ்வொரு கிழமையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக விமானமூலம் கொழும்புக்கு அனுப்பப்படுகின்றனர். இவர்களில் சிலர் கொழும்பு செல்வதற்கு முற்றுமுழுதாக மறுப்பார்கள். சில நோயாளிகள், மொழிப் பிரச்சனை, தங்குமிட வசதியின்மை, கொழும்பில் நிலவும் பாதுகாப்புப் பிரச்சனைகள், என ஏராளமான துயரங்களை அனுபவிப்பார்கள்.

இத்தனை பிரச்சனைகளையும் தவிர்ப்பதற்கு யாழ் போதனா வைத்தியசாலையில் ஒரு இருதய ஆய்வுச் சாதனம் (Cardiac Investigation Unit) அமைப்பது சாலச்சிறந்த நடைமுறையாகும். அன்பார்ந்த தமிழ் மக்களாகிய உங்களது உதவிக்கரங்கள் உங்கள் உறவினர்களின் இருதயத்தைப் பேணி அவர்களின் உயிரைப் பாதுகாக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த உபகரணத்தை நாம் பெறுவோமாகில் அதை உரிய முறையில் சுகாதார அமைச்சுடனும் சம்பந்தப்பட்ட சகலரினதும் ஒத்துழைப்புடனும் நிச்சயமாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்வோம் என உறுதி கூறுகிறோம். அத்துடன் இதில் பயிற்சிப்பெற்ற இரு இருதய வைத்திய நிபுணர்கள் இந்த சேவையை வழங்க உங்கள் உதவியை நாடியுள்ளனர். சுகாதார அமைச்சு இதற்கான தொடர் செயல்களையும் பராமரிப்பு பொறுப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளது. உங்களால் இயன்ற உதவியை இந்த இருதய நல நிவாரண திட்டத்துக்கு வழங்கும்படி யாழ் வைத்தியசாலையில் 20 வருடங்களுக்கு மேல் பணியாற்றி வரும் நான் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் தொடர்ந்த ஆதரவில்தான் எமது மக்களின் உடல்/உள நலம் பாதுகாக்கப்படுகிறது.

To make a donation please call: 905-949-5656 or 905-273-7946

***Direct depoist***
Bank of Montreal
Transit No: 29862, Account No: 8140197, Payable to: CMDDA-Save a Heart Project
(Please write to Dr. Mohan if you are making a direct deposit indicating the same)

***By mail***
Dr.R. Mohan -Treasurer CMDDA
206-3033 Palstan Road
Mississauga ON L4Y 4E7


யசோ சின்னத்துரை
கனடிய சட்டத்தரணி

**The Law Offices of**

**Yaso Sinnadurai**
Barrister & Solicitor, Notary Public

வீடு
காணி
வர்த்தகச் சட்டம்

Real Estate Law
Residential &
Commercial
Business Law

**Tel: 416 265 3456** **Fax: 416 265–2770**

2100 Ellesmere Road, Suite 202, Scarborough ON M1H 3B7 (Markham & Ellesmere)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சிந்தனைப் பூக்கள்*
எஸ். பத்மநாதனின் தொடர் 24

# சிட்டுக்களே வாருங்கள்!

அன்பான சிட்டுக்களே!

நீண்டதொரு விடுமுறையில் மகிழ்ச்சியோடு விளையாடிக் கொண்டிருக்கும் உங்களுக்கு படிப்பு விடயத்தில் சில ஆலோசனைகளை அவ்வப்போது வழங்கி வருவதே பொருத்தமானது. நீங்கள் ஆங்கிலத்தில் சிறந்த மேதைகளாக வருவதற்கு நேரு மாமாவின் உதாரணத்தையே குறிப்பிடலாம்.

ரோஜாப்பூவை தனது மேலாடையில் எந்த வேளையிலும் விரும்பி சொருகியிருக்கும் முன்னாள் இந்தியப் பிரதமர் நேருஜியின் வாழ்க்கை வரலாற்றினை மாமா படிக்க நேர்ந்தது. உங்களைப் போல் சிறிய வயதில் படித்தது ஞாபகம். அவர் எப்போதும் தனது பொக்கெற்றில் சிறிய ஆங்கில அகராதியையும் சிறிய அற்லஸ் ஒன்றினையும் வைத்திருப்பதாக குறிப்பிட்டிருந்தார். உலகை ஆக்கிரமித்துள்ள ஆங்கில மொழியையும், உலக நாடுகளின் பரம்பலையும் அறிந்து கொண்டால் அறிவில் பாதி வந்து விடுவதாக அவர் எண்ணினார். அது முற்றிலும் உண்மைதான்.

அகராதிகள் பற்றி உங்கள் அறிவை தூண்டி நீங்களும் அதனை வாங்கி சேகரித்து படிப்பதில் அக்கறை செலுத்துங்கள். அகராதி (Dictionary) பற்றி உங்களுக்கு முக்கிய தகவலை கூறினால் ஆச்சரியப்படுவீர்கள். எங்களிடம் ஓரிரு அகராதிகளே இருக்கும். ஆனால் இன்டியானா மாகாண பல்கலைக்கழகம் (Indiana State University at Terre Haute) 8,000 இற்கு மேற்பட்ட அகராதிகளை வைத்திருக்கிறது. இன்றைய அகராதிக்கு முதல் வடிவம் கொடுத்தவர் 1837 இல் ஸ்கொட்லாந்தில் பிறந்த James Murray என்பவராவர். இவரது முயற்சியை அடுத்து 1878 இல் Oxford University Press 'A' என்ற எழுத்துக்கு மட்டும் அகராதியை தயாரித்தது. 1928ல் இது முழுமை பெற்ற வேளையில் 15487 பக்கங்களில் 414825 சொற்களை கொண்டிருந்தது. இன்று உலகம் முழுவதிலும் Oxford, Collins, Longman, Webster ஆகிய பெயர்களில் பல படிவங்களில் அகராதிகள் வெளிவருகின்றன.

நாங்கள் சிட்டுக்கள் தானே! மாமா அகராதியை படிக்க சொல்கிறாரே என்று எண்ணி விடாதீர்கள். 1330 திருக்குறளையும் நான்கு வயது சிறுமி ஒப்படைக்கும் நிலையில் உங்களால் செய்ய முடியாதது ஒன்றுமில்லை. இதன் பயனை பின்பு உணருவீர்கள்.

அகராதிகளில் உச்சரிப்பு, அமைப்பு, சொல்வகைகள், இலக்கணம், விஞ்ஞான விளக்கங்கள், இடப் பெயர்கள், வரலாற்றுப் பதிவுகள், உசாவுதல்கள், தொடர்புள்ள பெயரடைகள், சுருங்கருத்து, சுருக்க எழுத்துக்கள், பயன்பாட்டுக் குறிப்புகள் போன்ற பல அடங்கியுள்ளன. எனினும், நீங்கள் உங்கள் வயதுக்கு ஏற்ற அகராதிகளைச் சென்று பார்த்து வாங்கி சேகரித்து படியுங்கள். ஒரு காலத்தில் மிகப் பெரிய ஆங்கில மேதாவியாகி விடுவீர்கள்.

அன்பான சிட்டுக்களே! தற்போது நடைபெற்று வரும் சொல்கூட்டுதல் (Spelling Bee) போட்டியில் அமெரிக்கக் கண்டத்தில் முதலாவதாக வர உங்களால் முடியும். நீங்கள் முயற்சி செய்தால் எதுவும் முடியும். இன்றே அகராதி படிக்க ஆரம்பியுங்கள்.

மீண்டும் சந்திப்பேன்.

The Law office of
**GARY**
Anandasangaree

**416 321 1100**

**Gary** Anandasangaree
Barristor and Solicitor

10 Milner Busines Court
Suite: 210
Toronto, ON. M1B 3C6

Phone: 416 321 1100
Fax: 416 321 1107
gary@galaw.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங் செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள டும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario. MIK 5J8**
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5

**Dr. Shan - Tuesday (morning)**
**Dr. Yao San (Tue, Fri & Sat**
**Dr. Brian (monday)**
**Dr. May (wednesday)**

**(416) 690 0121**



**EARLY CHILDCARE ASST. (ECA)**
100% Guarantied Co-op placement
**JOB OPPORTUNITIES**
- *Child Care Assistant*
- *Child Care Worker*
- *Day Care Worker / Teacher*
- *Preschool Worker*
- *Infant Day Care Worker*

**COMPUTERIZED ACCOUNTING**
**JOB OPPORTUNITIES**
- *Accounting Assistant*
- *Accounts Manager*
- *Accounts payable clerk*
- *Accounts Receivable Clerk*
- *Payroll clerk*

**PERSONAL SUPPORT WORKER (PSW)**
100% Guarantied Co-op placement
**JOB OPPORTUNITIES**
- *Personal Support Worker*
- *Home Support Worker*
- *Personal Care Attendant*
- *Resident Care Aid*
- *Nursing Assistant*

**MEDICAL OFFICE ADMIN (MOA)**
**JOB OPPORTUNITIES**
- *Medical Office Assistant*
- *Medical Admin. Asst.*
- *Medical Receptionist*
- *Medical Secretary*
- *Hospital Ward / Unit Clerk*

**BUSINESS ADMINISTRATION**
**JOB OPPORTUNITIES**
- *Administrative Assistant*
- *Office Assistant*
- *Office Administrator*
- *Management Trainee*
- *Executive Assistant*

**NETWORK ENGINEERING**
**JOB OPPORTUNITIES**
- *Network Administrators*
- *Systems Administrators*
- *Technical Support Specialists*
- *Helpdesk Support*
- *LAN Administrators*

*Shaping careers for over 15 years*

*Changing your life begins with us.....*

*Week-ends & Evening Courses*
Canadian Security Courses,
QA / Software Testing, AccPac, Quick books, Ms Office,
Visual Basic, C++, Visual C#, .Net, A+, MCP, MCSE, CCNA

**Financial Assistance**
Financial Assistance may be available for those who qualify.
**We welcome:**
- ☐ Social Assistance receipients
- ☐ EI - currently receiving / received receipients
- ☐ Maternity benefits received receipients

# Computek College


**BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY**

**Kennedy / Sheppard**
(North-East Corner)
**Tel: 416-321-9911**
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

**Kennedy / Eglinton**
N/W Corner, Above Liberary
**Tel : 426.285.9941**
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON.,M1K2P5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா விவேகானந்தன்
**பொன்னின் பொழிகை**
தொடர் 19

# களிமண்

மண்ணின் மேற்படலம். நிலத்தின் கவசம்.

இது நீரில் கரைந்திருந்தால் சேறு. சற்றே உலர்ந்தால் சகதி. மெல்லக் காய்ந்தால் களி. இறுகிக் கிடந்தால் பாளம்.

மண்ணின் படைகளுக்கெல்லாம் இதுதான் பாதுகாப்புப்படை.

நீர், வேர் எதுவாயினும் நிலமிறங்க விரும்பினால் படர்ந்து கிடக்கும் களி கடந்துதான் உள்ளிறங்க முடியும்.

இயற்கையின் விசித்திரங்கள் வியப்பின் எல்லை கடந்தவை.

களி, மண்ணுக்கு மட்டுமா பாதுகாப்புப் படை? உலக உயிர்களுக்குமல்லவா இது காவல் படை.

வானத்து நீர் அத்தனையையும் நிலம் உண்டுவிடாமல், நமக்காகவும் தேக்கித் தருவது இந்தக் களியல்லவா.

மனிதன் மட்டும் களியின் பயனைக் கண்டறியவில்லை என்றால் நாகரிகத்தின் தொடக்கம் இன்னும் தள்ளிப்போயிருக்கும். களியின் பொருளறிந்த மனிதன், சட்டி முதல் கோட்டைவரை களி கொண்டே கட்டியிருக்கின்றான்.

களியைச் சுட்டுப் பயன்படுத்திய நாள்தான், மனிதன் தன்னை புதிய வளர்ச்சிக்காகத் தயார் படுத்திய நாள்.

கட்டிய வீட்டின் தளமும், சுவரும் ஏன் ஓடும் கூட களி கொண்டு ஆக்கப்பட்டதுதானே.

களியை வனைந்து வனைந்துதானே கலையைக் கற்றுக்கொண்டான் மனிதன். களி கொண்டு வடிவமைக்கப்பட்டபின்தான் கடவுளரே அடையாளம் காணப்பட்டார்கள்.

அரண்களாகி எதிரியின் எறிகணை தாங்கும் களி, கறையானின் சிறு கொம்புகளுக்கும் இளகிவிடுகின்றது.

மண்ணின் வகைகளுக்குள் மகத்துவம் கொண்டது களிமண். கரைந்த களிதான் எம்மால் சேறெனப்படுகின்றது. சேறையும், சேறாகிக்கிடக்கின்ற எதையும் மனிதம் பெரும்பாலும் மதிப்பதில்லை.

சேறை விரும்பாத மனிதம் சிலவேளை சேறு பூசுவதை விரும்புகின்றது. வேண்டாதவர் மீதும், சிலபொழுதுகளில் வேண்டியவர் மீதும் கூட சேறு பூசப்படுவதைக் கண்டு களி கொள்கிறது.

சகதியை தொட்டு வந்தவர்களைக் கூட தூர வைத்தே பார்க்கின்றது மனிதம். மனிதப் பார்வையில் புற அழுக்கின் அடையாளமாகியிருக்கிறது சேறு.


சுட்டாலும் எரியாத கறை உள்ளிருக்க, சட்டெனக் கழுவினால் விட்டகலும் சேறை அழுக்கென்று அரற்றி ஆர்ப்பரிக்கின்ற உலகம் இது. மண்ணை மதிப்பதாகக் கூறும் மனிதம் சேற்றைப் பழிப்பது எப்படி இயல்பாக முடியும்?

சேற்றுக்குள் சில கால்கள் இறங்கவில்லை என்றால் உலகில் பலர் சோற்றுக்குள் கை வைக்க முடியாது.

பயிர்களின் வேர்கள் விரும்பி விளையாடும் மைதானம் சேற்றுநிலமல்லவா. மற்றவரை மதிக்கும் பண்பிற்கு முன்பாக சேற்றை மதிக்கக் கற்றுக்கொள்வோம்.

சேற்றின் பெருமையை முழுமையாய் உணர்ந்த ஒரு மிருகம் (உயிர்) எருமையே.

Sabesan's Choice!



விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்

வீடு திருத்தம்
மற்றும் நிலக் கம்பளம்
பொருத்தும் வேலைகளில்
தன்னிகரற்றவர்!

சபேசன்

ஒருமுறை
தொடர்பு கொண்டால்
பலன் புரியும்!
416 605 1990


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளை...

வேறு பயணத்துக்குத் தேவையான பொருட்களுடன், ஏறி நகர்ந்து சென்றதைப் பார்த்துக்கொண்டு நின்றேன். வழமைபோல் இரண்டு நாட்கள் தங்கியிருப்பதாக திட்டமிட்டிருந்தார்கள். அன்றய இரவு என் கண்கள் மூட மறுத்தன. தூக்கம் தூரத்தே சென்றது. தோணி கரையைவிட்டுச் சென்றது, நிலவு வெளிச்சத்தில் சிறுவர்கள் ஒழித்து விளையாட்டு, கூத்துப் பாட்டு, உயரமான பூவரசம் மரத்தின் கீழ் நிறுவப்பட்ட கூடாரத்தில் தூக்கமின்றி அவர்கள் ஒருவருக்கு ஒருவர் செய்யும் குறும்புகள் எனது நினைவில் தோன்றி என் மனதைக் குழப்பின. அந்தவேளை அவர்களுடன் இருக்கவேண்டும் என்று என் உள்ளம் தூண்டியது. எனக்குச் சக்தி இருந்திருந்தால் அந்த நள்ளிரவில் சூரியனை உதிக்கச் செய்திருப்பேன். ஐயாவின் கட்டளையை மீறத் துணிந்தேன். அதன் பிரதிபலனை எதிர்நோக்கத் தயாரானேன்.

அதிகாலை, வீட்டில் மற்றவர்கள் எழுந்திருக்கும் முன்னர், உடையை மாற்றிக்கொண்டு தீவுக்குக் கால் நடையாக செல்லத் தீர்மானித்து பயணத்தை ஆரம்பித்தேன். அத்தீவுக்கு கால் நடையாக செல்லலாம் என்பதை அறிந்திருந்தேன்: பண்ணை வீதியால் பாலத்தைக் கடந்து, அல்லைப்பிட்டிக்கு கிட்டவுள்ள நீர்ப் பெருக்கு குறைவான பகுதியால் கடலைக் கடந்து தீவை அடையலாம் என்பது எனக்குத் தெரிந்திருந்தது. நாலடி உயரம் உள்ள ஒருவருக்கு வெள்ளப் பெருக்கு நாட்களில் கடல் நீர் இடை அளவில் இருக்கும். நான் அப்பொழுது கிட்டத்தட்ட மூன்றரை அடி உயரம் ஆனபடியால் வெள்ளப்பெருக்கு நேரத்திலும் என்னால் கடலை கடக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. காலையில் வெறிச்சோடிக்கிடந்த கொட்டடி, பண்ணை வீதிகளால் தட்டத்தனியே நடந்து சென்று தீவை எப்படியோ அடைந்ததை நினைத்து மிகவும் ஆனந்தமடைந்தேன். என்னைத் தீவில் கண்டதும் சித்தி சற்று சஞ்சலம் அடைந்தார். அதிலும் நான் தீவை அடைந்தவிதம் அவவை பதற்றத்தில் ஆழ்த்தியதை என்னால் உணர முடிந்தது. ஆனால் அப்பொழுது காரணம் புரியவில்லை. எனது தோழர்கள் என்னைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். தங்கள் விளையாட்டுக்களில் எல்லாம் என்னைச் சேர்த்துக் கொண்டார்கள். கொண்டாட்டத்திற்கும் குதூகலத்திற்கும் இத்தீவில் எல்லையே இல்லை. எப்பொழுதும் புதிய அனுபவம். அன்றைய குதூகலத்தை சொல்லவும் வேண்டுமா?

மாலை 5 மணி இருக்கும். ஒரு தோணி தீவின் கரையை அடைந்தது. அதில் யார் வந்துள்ளார் என்பதை அறிவதற்காக நானும் சிறுவர்களும் கரையை நோக்கி ஓடிச் சென்றோம். அத்தோணியில் வந்த இருவரில் ஒருவரைக் கண்டதும் எனது இதயம் வேகமாக இயங்கத் தொடங்கியது. எதிர்பார்த்தது இவ்வளவு விரைவில் நடைபெறும் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. தொடர்ந்து நடந்ததை நான் சொல்லவேண்டுமா? தனது கட்டளையை மீறியதற்காக மட்டும் ஐயா எனக்கு தண்டனை கொடுக்கவில்லை. ஆற்றில் மூழ்கி எனது உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தும் செயலைச் செய்தேன் என்ற காரணமே எனக்குக் கிடைத்த தண்டனைக்கு முக்கியமானது. நான் பண்ணை வீதியில் இருந்து பரவைக் கடல் பரப்பில் இறங்காமல் ஆழமான கடலில் கால் வைத்து விட்டேன். எனது நல்ல அதிர்ஷ்டம் அந்தவேளை ஒருவர் கடலில் தடி பாய்ந்து வலை பரப்பிக்கொண்டிருந்தார். என்னை அங்கு கண்டதும் என்னிடம் வினவி அக்கடல் பகுதியில் நான் நடந்து வரும் நோக்கத்தை அறிந்து தீவுக்குச் செல்லும் சரியான கடல் பாதையை காட்டிக் கொடுத்தார். அவரின் உதவி யால்தான் நான் உயிருடன் தீவைச் சென்றடைய முடிந்தது. அன்றைய தினம் மாலையில் என்னைக் காணவில்லை என்று எனது பெற்றோர் தேடி அலைந்த பொழுது கடலில் எனது உயிரைக் காப்பாற்றிய அந்த மனிதர் எனது வீரசாகசச் செயலைப்பற்றி விளக்கமாக எனது ஐயாவுக்குக் கூறியுள்ளார்.

அடுத்த இதழில் முடியும்

## ஹைபிரிட் கார் விற்பனை அதிகரிக்கிறது

வாகன எரிபொருளின் விலை கூடிச் செல்வதனால், ஹைபிரிட் கார்களை வாங்குவோர் தொகை அதிகரித்துள்ளதுடன், இக் கார்களுக்கு பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. கடந்த வருட முதல் அரையாண்டுக் காலத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருட முதல் அரையாண்டுக் காலத்தில் 66% இனால் அதாவது 12,000 இனால் கார் விற்பனை அதிகரித்துள்ளதென ஹைபிரிட் கார் தயாரிப்பாளர்களின் தரவுகள் தெரிவிக்கின்றன. இக் கார்களின் விலையும் குறைவடைவது பாவனையாளர்களை மேலும் ஈர்க்கின்றது.

## வாடிக்கையாளருக்கு நீண்டகால பாவனை ஒப்பந்தம்

கனடிய கைத்தொலைபேசிக் கம்பனிகளுக்கிடையே ஏற்பட்டு வரும் போட்டிகள் காரணமாக, வாடிக்கையாளரை நீண்டகால ஒப்பந்தங்களில் கட்டிப்போடும் யுக்தியை மிகப் பெரிய கம்பனிகளான ரோஜர்ஸ், பெல், ரெல்லஸ் கையாளத் தொடங்கியுள்ளன. கனடாவில் தற்பொழுது 20 மில்லியன் கைத்தொலைபேசிப் பாவனையாளர்கள் உள்ளனர். இது கனடாவின் மொத்த சனத்தொகையில் 62 வீதமாகும்.

## சர்க்கரையோடு..

ஏற்படுவதைத் தடுக்கலாம். 10 -15 நிமிடங்களுக்குப் பின்பு மீண்டும் குருதிப் பரிசோதனை செய்து குளுக்கோசின் அளவு குறைவாகவே இருந்தால் மீண்டும் மேற்கூறியவற்றில் ஒன்றை உட்கொள்ள வேண்டும். நோயாளி அறிவிழந்த மயக்க நிலை யையடைந்தால் வாய்மூலம் எதுவும் உட்கொள்ளக் கொடுக்கக் கூடாது. குளுக்ககோன் (glucagon) எனப்படும் மருந்தை தசையினூடாக ஊசி மூலம் ஏற்ற வேண்டும். குளுக்ககோன் எனப்படுவது சதயச் சுரப்பியிலிருந்து சுரக்கப்படும் ஒரு சுரப்பாகும். இது செலுத்தப்பட்டதும் உடலில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் மாப்பொருள் உடனே குளுக்கோசாக மாற்றமடைந்து குருதிச் சுற்றோட்டத்தை அடைய குளுக்கோசின் அளவு சீர் செய்யப்படுகிறது. மருந்துச் சிகிச்சை பெறும் அதிலும் குறிப்பாக இன்சுலின் சிகிச்சை பெறும் ஒவ்வொரு நோயாளியிடமும் குளுக்கோஸ் வில்லைகளும், குளுக்ககோன் மருந்தும் எந்நேரமும் இருக்க வேண்டியது அவசியம். மேலும் மிகுந்த தாழ்குருதிச் சர்க்கரை நிலையில் அல்லது அறிவிழந்த கோமா நிலையில் குளுக்ககோன் மருந்து ஏற்றப்பட வேண்டுமாதலால் நேயாளியால் அதை நிச்சயமாகச் செய்ய முடியாது இருக்கும். எனவே நோயளியின் குடும்பத்தினரோ அல்லது நண்பர்களோ இம்மருந்தை ஊசி மூலம் ஏற்றும் முறையைப் பயின்று வைத்திருக்க வேண்டியது அவசியம். குளுக்ககோன் மருந்தோ அல்லது அதைச் ஏற்றும் பயிற்சியோ இல்லாதவிடத்து 911 ஐ அழைத்து அவசரகால மருத்துவ சேவையினைப் பெற்றுக்கொள்வது அவசியம். அத்துடன் நீரிழிவு நோயாளி தனது நோய், பாவிக்கும் மருந்து பற்றிய விபரங்கள் அடங்கிய கைப்பட்டி அணிந்து கொள்வது நல்லது. தாழ்குருதிச் சர்க்கரை நிலையால் நோயாளி ஒருவர் மயக்கமடையும் சந்தர்ப்பத்தில் மயக்கநிலைக்கான காரணத்தை அறிந்து உடன-டியாகத் தகுந்த சிகிச்சை கிடைக்க உதவியாக இருக்கும். அடுத்த இதழில் நாட்பட்ட சிக்கல்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்
தலைவர் - தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்

# என்றுமுள்ள செந்தமிழ் - 15

**கற்கை நன்றே கற்கை நன்றே!**

தமிழர்கள் அன்றும் சரி இன்றும் சரி கல்விக்கு முன்னுரிமை கொடுத்து வந்துள்ளார்கள். கல்வி கற்பதை வலியுறுத்தும் பாடல்கள் தமிழ் இலக்கியத்தில் நிறைய உண்டு.

கல்வியின் மாட்சியுணர்ந்த பாண்டிய வேந்தன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடிய பாடலென்று புறநானூற்றில் உள்ளது. அந்தப் பாடல் இது:

*உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே*
*பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்று உள்ளும்*
*சிறப்பின் பாலால் தாயும்மனம் திரியும்*
*ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்*
*மூத்தோன் வருக என்னாது அவருள்*
*அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்*
*வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்*
*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்*
*மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே* (புறம் 183)

நெடுஞ்செழியன் என்ற பெயரோடு பல மன்னர்கள் இருந்ததால் இவனை அடையாளம் காட்ட ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் எனப் புலவர்கள் அழைத்தனர். நாடு எத்தனை வளமுடையதாக இருந்தாலும் கல்வி வளம் இல்லாதாயின் அந்த நாடு நலிவுறும் என்று இந்த மன்னன் உணர்ந்திருந்தான் என்பது தெரிகிறது.

கல்வி வளங்கும் ஆசிரியனுக்கு ஒரு ஊறுபாடு உற்றவிடத்து அதனைத் தீர்த்தற்கு உவந்து உதவ வேண்டும். வேண்டுமளவிற்கு மிகவே ஆசிரியனுக்குப் பொருள் வழங்குதல் வேண்டும். மிக்க பொருள் கொடுத்த வழியும் ஆசிரியனை வழிபடுதற்கு, வெறுப்படைதல் ஆகாது. இவ்வாறெல்லாம் செய்து கல்வி கற்பது நன்று எனத் தொடங்கி, இப்பாட்டின் கண், கல்வியில்லாற்குத் தான் பிறந்த குடும்பத்திலே தன்னைப் பெற்ற தாயாலும் சிறப்பளிக்கப்பட மாட்டாது என்றும் அவன் நாட்டு அரசு முறையும் கல்வி அறிவுடையோனையே துணையாகக் கொள்ளுமே தவிரக் கல்லாதானை ஏற்காதென்றும், கற்றோன், கீழ் நிலையிற் பிறந்தானாயினும் அவற்குத் தலைமையுண்டாகும். மேல் நிலையிற் பிறந்தோனும் அக் கீழ்ப்பிறந்தான் தலைமையிற்றான், அக் கல்வி குறித்து வழிபட்டொழுக வேண்டுமென்றும் இவ்வாற்றால் குடும்பமும் சமுதாயமும் அரசியலும் யாவையும் கல்வி நலத்தால் சிறப்படைதலால் கற்றல் நன்று என்று ஆணையிடுகிறான்.

"வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும் கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே" என்று சொன்னதன் மூலம் கடைக் கழகத்தின் இறுதிக் காலத்தில் பிராமண, சத்திரிய, வைசிக, சூத்திரர் என்ற மனுசாத்திர நால்வருண வேறுபாடு தமிழகத்தில் புகுந்து விட்டதைக் காட்டுகிறது. மனுசாத்திரம் ஓதல், ஓதுவித்தல் பிராமணர்களுக்குரிய தொழிலாக வரையறை செய்து ஏனையோர்க்கு ஓதல், ஓதுவித்தலை மறுத்துவிடுகிறது.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடிய பாடலை அதிவீரராம பாண்டியர் தாம் பாடிய வெற்றி வேற்கை என்ற நூலில் அப்படியே எடுத்தாண்டுள்ளார். இவர் பாண்டிய நாட்டு கொற்கையை 450 ஆண்டுகளுக்கு முன் ஆண்ட சிற்றரசன் ஆவார். வரதுங்கபாண்டியர்க்கு இளவல், நைடதம், கூர்ம புராணம், இலிங்க புராணம், காசி காண்டம், வாயு சங்கிதை, திருக்கருவை அந்தாதி முதலிய பிற நூற்களையும் இயற்றியுள்ளார்.

*கற்கை நன்றே கற்கை நன்றே*
*பிச்சை புகினும் கற்கை நன்றே*
*கல்லா ஒருவன் குணநலம் பேசுதல்*
*நெல்லினுள் பிறந்த பதரா கும்மே.*
*நாற்பால் குலத்தின் மேற்பா லொருவன்*
*கற்றில னாயின் கீழிருப் பவனே*
*எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்*
*அக்குடியில் கற்றோரை மேல்வருக என்பர்*
*அற்வுடை ஒருவனை அரசனும் விரும்பும்.*

பிச்சை புகினும் கற்கை நன்றே என்றால் பிச்சை எடுத்து அந்தப் பணத்தில் படிக்க வேண்டும் என்பது இதன் பொருளல்ல. கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தவே இப்படிச் சொல்லியுள்ளார். கல்வியை நல்லாசிரியரிடம் சென்று கெஞ்சிக் கூத்தாடியாவது படிக்க வேண்டும் என்பதே இதன் உண்மையான பொருள்.

ஆண்பெண் இருபாலரும் கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை நாலடி நானூறு விளக்குகிறது.

*குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்*
*மஞ்ச ளழகும் அழகல்ல - நெஞ்சகத்து*
*நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையாற்*
*கல்வி யழகே யழகு.*

பூதஞ்சேந்தனார் என்பவர் இயற்றிய நூல் இனியவை நாற்பது. இதன் பெயரினால் குறிக்கப்படுவதுபோல இது நாற்பது வெண்பாக்களினால் ஆனது. பண்டைக்காலத் தமிழ் நூல் தொகுப்புக்களில் ஒன்றான பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் இதுவும் ஒன்று. உலகில் நல்ல அல்லது இனிமையான விடயங்களை எடுத்துக்கூறுவது மூலம் மக்களுக்கு நீதி புகட்டுவதே இந்நூலின் நோக்கம். ஒவ்வொரு பாடலும் மூன்று நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றது.

சுற்றியிருப்பவர்களுக்குக் கல்வி கற்பித்தல் மிகவும் நல்லது, கற்றறிந்த பெரியோர்களைத் துணை கொண்டு வாழ்தலும் மிக நன்று, சிறிய அளவிலாயினும் தேவைப்படுபவர்களுக்குக் கேட்காமலேயே கொடுப்பது எப்பொழுதுமே நல்லது என்னும் பொருள்படும் பாடல் இது.

*சுற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே*
*மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே*
*எள்துணை யானும் இரவாது தான்ஈதல்*
*எத்துணையும் ஆற்ற இனிது.*

*பிச்சைபுக் காயினுங் கற்றல் மிகஇனிதே*
*நற்சவையில் கைக்கொடுத்தல் சாலவும் முன்னினிதே*
*முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே*
*தெற்றவும் மேலாயார்ச் சேர்வு.*

→




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R&S Auto Sales
Top Quality Used Car Dealer
வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எங்கள் விசேட திறன்!
28 ஆண்டுகள் அனுபவம்!



RADHA
HONDA
TOYOTA
GM-MINI VANS




4362 Sheppard Ave. East at Brimley
Tel: 416 412 3838

## என்றுமுள்ள...

இனியவை நாற்பது போல இன்னா நாற்பது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதனை இயற்றியவர் கபில தேவர். ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்துக்களைக் கொண்டு ஒவ்வொன்றையும் 'இன்னா' என எடுத்துக் கூறுதலின் **'இன்னா நாற்பது''** எனப் பெயர் பெற்றது.

*குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னா*
*நிலத்து இட்ட நல் வித்து நாறாமை இன்னா*
*நலத்தகையார் நாணாமை இன்னா் ஆங்கு இன்னா,*
*கலத்தல் குலம் இல் வழி.*

நீதிநெறி விளக்கம் என்ற நூலை இயற்றியவர் குமரகுருபரர். இதில் கல்வியின் பயனை ஒரு பாடலில் கூறியிருக்கிறார்.

*அறம்பொருள் இன்பம் வீடும் பயக்கும்*
*புறங்கடை நல்லிசையும் நாட்டும் - உறுங்கலொன்று*
*உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை*
*சிற்றுயிர்க் குற்ற துணை.*

கற்றலின் மூலம் அறிவின் திறமுயர்ந்து அதனால் விளையும் பயன்பாட்டுநிலையை குறிப்பதாகவே எண்ண வேண்டியிருக்கிறது. எனவே அறிவின் ஊற்று நூல்களில் இருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும்.

கல்வியின் அருமை பெருமை பற்றி ஏனைய புலவர்களைவிட திருவள்ளுவர் மிக அழுத்தமாக அறிவுறுத்தியிருக்கிறார். வள்ளுவர் எந்தப் பள்ளியில், கல்லூரியில், பல்கலைக் கழகத்தில் படித்தார் என்பது தெரியவில்லை.

கி.பி. 470ஆம் ஆண்டு, தமிழகம் வந்த சீனப் பயணியான யுவான் சுவாங், தன் பயணக் குறிப்பில், சென்னையில் உள்ள திருவொற்றியூர், காஞ்சிபுரம், புதுவைக்கு அருகில் உள்ள பாகூர் ஆகிய மூன்று ஊர்களில் உள்ள வேதப் பாடசாலைகளில் மட்டுமே ஏறத்தாழ 5000 பிராமண மாணவர்கள், சமஸ்கிருதம் படித்துக் கொண்டிருந்த செய்தியை எழுதி வைத்திருக்கிறார்.

பிற்காலப் பாண்டியர், சோழர் ஆட்சியிலும் இந்நிலை தொடர்ந்தது. குறிப்பாக, இராசராசசோழன் காலத்தில், சமஸ்கிருதம் அறிந்தவர்கள் மட்டுமே அரசனின் மதிப்பைப் பெற்றனர். கல்வி என்பது ஒரு குறிப்பிட்ட சாதியினருக்கு மட்டுமே உரிய உரிமையாக ஆக்கப்பட்டது.

தமிழ் அரசர்கள் யாராவது பள்ளிகள் கட்டினார்கள் என்றோ அங்கே தமிழ்ப் புலவர்கள் தமிழ் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார்கள் என்றோ எந்த வரலாற்றுக் குறிப்பு மருந்துக்கும் இல்லை. பின் எப்படி நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் படைத்த இளங்கோ, வான்புகழ் வள்ளுவர், கல்வியில் பெரிய கம்பன் தோன்றினார்கள் என்பது வியப்பாக இருக்கிறது' (வளரும்)

---

## இணையத்தில் காற்றின் மாசு அறியும் குறியீடு

ஒவ்வொரு வருடமும், வளி மாசு காரணமாக, ஏறத்தாழ 6,000 கனடியர்கள் தமது காலத்துக்கு முன்பே மரணத்தை தழுவிக் கொள்கின்றனர். அதைவிட அதிகமானோர் நுரையீரல், இருதய நோய்களால் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். மிகக் குறைந்த பாதிப்பாக அனேகர் இருமலால் பாதிக்கப்படுகின்றனர். மாசடைந்த வளியைத் தவிர்ப்பதற்கும், வளி மாசடைதலைக் குறைப்பதற்கும், தமது சொந்த பாவனைகள், நடவடிக்கைகள் மூலமாக வளி மாசடைவதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் அவர்களுக்கு தாம் எப்பொழுது மூச்சு எடுக்கும் போது தமது உடல்நலத்திற்குக் கேடு விளைகின்றது என்பதை அறிய காற்றின் தரம் பற்றி தெரிந்திருத்தல் வேண்டும். இந்தப் புதிய காற்றின் தரம் அறி குறியீட்டினை www.airhealth.ca என்னும் இணையத் தளத்தில் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி

24

# வெள்ளிப் பணம் - டாலர்

கனடாவின் பொருளியல் காலநிலை (Economic climate) ஒரு பொருளாதார சுருக்க (recession) நிலைக்கு செல்கின்றது என சொல்லப்படுகின்றது. உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை ஏற்றம், அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கும் வீட்டுக் கடன்களில் (credit crunch) ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

சர்வதேச வர்த்தகத்தில் கனடாவின் ஏற்றுமதியில் ஏறத்தாழ 80 சதவீத்துக்கு மேல் ஏற்றுமதி செய்யும் நாடாக அமெரிக்கா இருப்பதனால் அமெரிக்காவின் பொருளாதார ஏற்ற இறக்கங்கள் கனடாவினையும் பாதிக்கின்றது.

உலகசந்தையில் மசகு எண்ணெயின் விலை ஏற்றம் எல்லா நாடுகளின் பொருளாதாரத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. அதில் கனடாவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக கனடாவின் வேலை இழப்புகளும் வேலைவாய்ப்புகளும் மாகாணத்துக்கு மாகாணம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. பொதுவாகவே ஒன்ராறியோ மாகாணத்தில் தொழிற்சாலை வேலைகள் கடந்த 12 மாத காலத்தில் 88000 தொழில்கள் மறைந்து போயுள்ளன. ஆனால் அல்பேட்டா (Alberta) மாகாணத்தில் தொழிற்சாலை வேலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்கான காரணமாக அந்த மாகாணத்தில் இருக்கும் வரிச் சலுகையும் மற்றும் எண்ணெய் வளம் கொண்ட மாகாணமாக இருப்பதுமாகும்.

எப்படியாயினும் இந்த யூலை மாதம் மாத்திரம் நாடு தழுவிய ரீதியாக 55000 தொழில்கள் இழக்கப்பட்டது 1991ம் ஆண்டு போல் ஒரு பொருளாதார (Economic recession) சுருக்கத்துக்கு இட்டுச்செல்லுமா எனப் பயப்படுபவர்களும் உண்டு.


வீடுகளின் விலைகளிலும் புதிய வீடுகளை கட்டுவதிலும் ஒரு மந்தபோக்கு தற்பொழுது காணப்படுகின்றது. வீடுகளின் விற்பனையில் 2007ம் ஆண்டு முதல் ஆறு மாதகாலத்துடன் 2008ம் ஆண்டினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது 13.1% வீழ்ச்சி காணப்பட்டுள்ளது. கனடா முழுவதுமாக சராசரியாக இந்த வருடம் வீடுகளின் விலைகள் 5.6% சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் இது 2009ம் ஆண்டும் தொடர்ந்து வீழ்ச்சி காணும் எனக் கூறப்பட்டுள்ளது.

ரொறன்ரோவின் பங்குச் சந்தையில் சராசியான வீழ்ச்சி காணப்படுகின்றது, குறிப்பாக வங்கிகளின் பங்குகள் கூட அமெரிக்காவின் வீட்டுக் கடன் (credit crunch) நெருக்கடிகள் காரணமாக வீழ்ச்சி கண்டுள்ளது.

கனடாவின் மொத்த உள் நாட்டு உற்பத்தி (Gross Domestic Product) ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும் போது மே மாதம். 0.1% குறைவடைந்து காணப்படுவதும் ஒரு அபாயமான குறியீடாக அமைவதாக பொருளியல் வல்லுனர்கள் தெரிவிக்கின்றார்கள்.

மேற்சொல்லப்பட்ட பொருளாதார தரவுகளை மேற்கோள் காட்டிப் பார்க்கும்போது எதிர்வரும் 18 தொடக்கம் 24மாத காலப்பகுதி பொருளாதார ரீதியில் கனடிய மக்களுக்கு மகிழ்சியை கொடுக்கும் காலமாக அமையமாட்டாது என்பது வெளிப்படையான உண்மையாக உள்ளது.

புதியமண்ணில் காலடி எடுத்து வைத்துள்ள தமிழ் மக்களாகிய நாம் இத்தகைய புதிய சூழலில் எவ்வாறு எமது பொருளியல் நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதினை கடந்தகால அனுபவங்களைக் கொண்டு நாம் ஒரு விழிப்புணர்ச்சி உடைய ஒரு சமூகம் என்பதினை கனடிய மண்ணில் நிலை நாட்டுவோம்.



**Jude**

**Anthonypillai LL.B. (Canada)**

Barrister, Solicitor & Notary Public
Former Asst. Crown Attorney

**Phone**
**416 332 8547**

**யூட் அந்தோனிப்பிள்ளை**
கனடிய வழக்கறிஞர்
முன்னாள் அரச வழக்கறிஞர்

**தொலைபேசி**
**416 332 8547**

**தொலைநகல்**
**416 332 8379**

2390 Eglinton Ave. East
Suite 259
Scarborough ON
M1K 2P5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

# SRI GANESHA DURGA HINDU TEMPLE OF MISSISSAUGA





**தொடர்புகளுக்கு:**

'ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர்', 'சிவாகம கிரியா பூஷணம்'

## சிவஸ்ரீ. பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்

(ராஜன் குருக்கள்)

கனடிய திருமணப்பதிவு அதிகாரி, இந்துமதகுரு, புங்குடுதீவு - 10ஆம் வட்டாரம்
ஆலயப் பிரதமகுரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை

**7220 Tranmere Drive**
**Mississauga, ON. L5S 1L6**
**TEL: 905-405-0011 / 905-501-0011**

**www. sriganeshadurga.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NLR ACCOUNTING AND TAX SOLUTIONS**

Personal Tax Returns
Corporate Tax Returns
Book-keeping
RST, GST, Payroll service

E-File
confidential
friendly and
fast service

Phone
**416 888 1128**
**416 492 7973**

Location
2525 Pharmacy Av.
Pharmacy Av & Finch Av. East
(Inside Universal Textiles)

NLR

# உடல்வலு குறைந்தோருக்கான புதிய சேமிப்புத் திட்டம்

**யோகி தம்பிராசா**
நிதி ஆலோசகர்

நீங்கள் ஊனமுற்றவரா? அல்லது ஊனமுற்ற ஒருவரைப் பராமரிக்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் ஏற்கனவே 2007ம் ஆண்டு வருமானவரிப் பத்திரத்தை நிரப்பி அனுப்பியிருப்பீர்கள். அத்துடன் உங்களுக்கு ஊனமுற்றோருக்கான வருமான வரிக் கழிவும் (Disability Tax Credit) கிடைத்திருக்கும்.

இந்த இரண்டையும் நீங்கள் செய்திருந்தால் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைமுறைப்படுத்த இருக்கும் மேற்சொன்ன சேமிப்பு திட்டத்தில் பதிவு செய்து பெரும் நன்மை அடையும் வாய்ப்பு உங்களுக்கு உண்டு.

முதலாவதாக உங்கள் குடும்பத்தின் வருட வருமானம் $21,227 க்கு குறைவாக இருந்தால் உங்களுக்கு வருடத்துக்கு $1000 பணப்பத்திரம் (bond) அரசாங்கத்தால் வழங்கப்படும்.

உங்கள் வருட வருமானம் $21,227க்கு மேலாக ஆனால் $37,880 க்கு குறைவாக இருந்தால் மேற்சொன்ன பணப்பத்திரம் தகுந்த விகிதாசாரத்தில் குறைக்கப்பட்டு உங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும்.

இது தவிர, உங்கள் வருட வருமானம் $74,357 க்கு குறைவாக இருந்தால் நீங்கள் இந்த திட்டத்தின் கீழ் முதலீடு செய்யலாம். உங்கள் முதலீடு $500 ஆக இருக்கும் பட்சத்தில் அரசாங்கம் உங்கள் கணக்கில் மூன்று மடங்கு, அதாவது $1500 முதலீடு செய்யும். மேலும் நீங்கள் $1000 முதலீடு செய்தால், அரசாங்கம் உங்கள் கணக்கில் $2000 முதலீடு செய்யும்.

மொத்தமாக வருடத்துக்கு நீங்கள் உங்கள் கணக்கில் $1500ம் அரசாங்கம் கணக்கில் $3500 ம் சேமிக்கலாம். இப்படியே தொடர்ந்து நீங்கள் வருடா வருடம் முதலீடு செய்யும் பட்சத்தில் அரசாங்கமும் தொடர்ந்து அதிகபட்சம் 20 வருடங்களுக்கு முதலீடு செய்யும்.

ஊனமுற்றவர் எந்த வயதிலும் இந்த திட்டத்தை தொடங்கலாம். தொடர்ந்து அதிகபட்சம் இருபது வருடங்கள் இந்த திட்டத்தில் அவர் முதலீடு செய்து பயனடையலாம். ஆனால் தனது 49வது வயதை எட்டும்வரைக்கும்தான் அவர் அரசாங்க உதவிப் பணத்தை பெறமுடியும்.

தற்பொழுது உங்களுக்கு (Ontario Disability Support Payment - ODSP) ஒன்ராறியோ ஊனமுற்றவர் உதவிப் பணம் கிடைக்கிறது என்றால் உடனடியாக வருமானவரி விண்ணப்ப பத்திரம் #2201 ஐ உங்கள் வைத்தியரைக் கொண்டு நிரப்பி வருமான வரி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கவும்.

உங்களுக்கு (Disability Tax Credit) ஊனமுற்றோருக்கான வருமானவரிக் கழிவு கிடைக்க வேண்டும். அது கிடைக்காமல் போகும் வாய்ப்பு குறைவு.

குறிப்பு: இந்த திட்டம் தொடர்ந்து வெற்றியுடன் செயல்பட ஒன்ராறியோ மாகாண அரசின் முழு ஒத்துழைப்பும் அவசியம். இது பற்றி பின்னர் எழுதுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

**JRB Universal Inc.**
Almost All Services Available

B: 416 752 7555
C: 416 937 9081



**R.R. Rajkumar**
B.Com (Hons), M.B.A.

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •

# ஆலய சன்னிதானங்களில்

## கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வட அமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மஸி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## மிசிசாகா ஶ்ரீகணேச துர்க்கா ஆலயம்

மிசிசாகா 7220 Trammere Drive்ல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஶ்ரீகணேச துர்க்கா இந்து ஆலயத்தில் தினசரி மூன்று காலப் பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கிரியா வழிபாடுகளாலும், திருமணச் சடங்குகளாலும் வடஅமெரிக்கா முழுவதும் நன்கு பிரபல்யமான சிவஶ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் (ராஜன் ஐயா) அவர்களே இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். இதன் பிரதம குருக்களும், அறங்காவல் சபையின் முதல்வரும் இவரே. ஆலய தொலைபேசி இலக்கம் 905 405 0011. ஶ்ரீவிஜயலட்சுமி வாசாவின் தொலைபேசி இலக்கம் 905 501 0011.


## ஸ்காபரோ ஶ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்

ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேணிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஶ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட்ட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

Motor Vehicle Accident
Criminal
வாகன விபத்து!
கிறிமினல்!

உங்கள் கணிப்பு தவறாகலாம்..
உரிய



சட்ட ஆலோசனைகளுக்கு
கலகலப்பு தீசன்
416-803-5296
WWW.KALAKALAPPU.NET



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் பிரயாணம்..

எமது ஆதரவாளர்கள். ஆகவே அவர்கள் கேட்ட பொழுது அதில் நியாயம் உள்ளதோ இல்லையோ என்பதை நாம் தீர்மானிப்பதில்லை. அவர்கள் வேண்டுதலுக்கு உதவுவது எமது அரசியல் வாழ்வுக்குப் பாதுகாப்பு. நீங்கள் சொன்னது அத்தனையும் சரி. அதை நான் முதலில் அவருக்குச் சொல்லியிருந்தால், அவர்கள் நான் ஒன்றுக்கும் உதவாதவன் எனத் தீர்மானித்திருப்பார்கள். நீங்கள் சொன்னபின் நான் அதை அவர்களுக்குச் சுலபமாக விளக்க முடிந்தது. ஆகவே என்னை மன்னியுங்கள். இனிமேல் இத்தகைய பிரச்சினைகள் வராது. நீங்கள் எப்படிப்பட்டவர் என்பது இக்கிராம மக்களுக்கு இன்றைக்கே புரிந்திருக்கும். நன்றி என்றார். நானும் நன்றி கூறிவிட்டுச் சென்றேன். அவர் நல்லவர் என்பது ஊர்ஜிதமாயிற்று.

**5. குறிக்கோள் வாசகம், கல்லூரிக் கீதம்:** ஆரம்பத்திலிருந்து பாடசாலைகள் யாவற்றிலுமே குறிக்கோள் வாசகங்கள் உள்ளதைக் காண முடியும். அங்கு அதனை Motto என ஆங்கிலத்தில் சொல்வார்கள், இங்கு அதனை Mission statement என்பார்கள். மகாஜனக் கல்லூரியின் குறிக்கோள் வாசகம் 'உனை நீ அறி' எனும் சோக்கிறற்றிசுனுடைய வாக்கியம். புத்தூர் ஸ்ரீசோஸ்கந்தவின் வாசகமாக 'கற்றாங்கு ஒழுகுக' என்பது இருந்து வருகிறது. ஏழாலையில் அது 'கற்க கசடற' வாக உள்ளது. பாடசாலைகள் யாவும் இலச்சினைகளையும் கொண்டவையாக இருந்து வருகின்றன. ஆகவே குறிக்கோள் வாசகங்கள் இலச்சினைகளின் உள்ளே அல்லது அவற்றினைச் சூழப் பொறிக்கப் பட்டிருக்கும். கத்தோலிக்க மற்றும் மிஷனறிப் பாடசாலைகளிலே இவ்வாசகம் பெரும்பாலும் இலத்தீன் மொழியிலே அல்லது ஆங்கிலத்திலே அமைந்திருப்பதைக் காணலாம். புனித சம்பத்திரிசியார் கல்லூரி மற்றும் ஹாட்லிக் கல்லூரி குறிக்கோள் வாசகங்கள் இலத்தீன் மொழியில் உள்ளன. 'Fide Et Labore' என்பது புனித சம்பத்திரிசியார் கல்லூரியினுடைய வாசகம் பாடசாலை இலச்சினைக்கு மேலே பொறிக்கப்பட்டுள்ளது. ஹாட்லிக் கல்லூரியினது வாசகம் 'Fiat Lux' என்பது. இது இலச்சினையின் நடுவிலே பொறிக்கப் பட்டுள்ளது. இவைக்கு மாறாக யாழ்ப்பாணக் கல்லூரியின் வாசகம் ஆங்கிலத்தில் உள்ளது. அதன் இலச்சினையாகிய திறந்த புத்தகத்தின் ஒன்றின் இரு பக்கங்களிலும் 'Jesus Christ The Light of Life' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. யூனியன் கல்லூரியினது வாசகம் தமிழிலே 'நூற்பயனடைதல் நாற்பயனாமே' என தாமரையையும் உதயசூரியனையும் கொண்ட பாடசாலை இலச்சினையைச் சூழ்ந்து உள்ளதனைக் காணமுடிகிறது. ஸ்கந்தவரோதயக் கல்லூரியினது வாசகம் 'உண்மையே உயர் அறம்' என்பது. இலச்சினையின் மேற்புறத்திலே பாடசாலையின் பெயரையும் கீழ்ப்புறத்திலே வாசகத்தினையும் கொண்டிருக்கிறது. இராமநாதன் கல்லூரியது வாசகம் வழக்கம் போலச் சற்று நெடியது, 'திரிகரண சுத்தியும் காரிய வெற்றியும் அருள்வாய்" என்பது.

நான் ஏழாலை சென்ற பொழுது அங்கே பாடசாலை இலச்சினையும், குறிக்கோள் வாசகமும் இருந்த போதிலும் கல்லூரிக் கீதம் ஒன்று தேவையாக இருந்தது. நான் மாணவனாக இருந்த பொழுது எமது பாடசாலைகளில் பாடசாலைக் கீதம் இருந்ததில்லை. 1950 களில் பாடசாலைகள் பலவற்றிலே பாடசாலைக் கீதங்கள் இயற்றப்பட்டு மாணவர்கள் கூடல்களில் (Assembly) பாடப்பட்டு வந்தன. இது அமெரிக்க மிசனறிகளாலும் கத்தோலிக்க திருச்சபைகளாலும் நடத்தப்பட்ட பாடசாலைகளிலே தான் ஆரம்பமாய் இருந்தன என எண்ணுகிறேன். அப்பாடசாலைகளின் பாடசாலைக் கீதம் பொதுவாக ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டுப் பாடப்பட்டு வந்தன. கத்தோலிக்க பாடசாலைகளில் எப்புனிதரின் பெயர் அப்பாடசாலைக்கு இடப்பட்டதோ அப்புனிதரினது புகழ் பாடுபவையாகவும் அவர்களைப் பிரார்த்திப்பவையாகவும் அமைந்தன. மிசனறிப் பாடசாலைகளில் பொதுவாக மிசனறியின் புகழ் பாடுபவையாக அமைந்தன. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அமெரிக்க மிசனறிப் பாடசாலையாக அரசு கையகப்படுத்தும் வரை இருந்து வந்தது.

அங்கேயும் கல்லூரிக் கீதம் ஆங்கிலத்திலேயே தான் இசைக்கப்பட்டு வந்தது. ஆனால் அங்கே அதிபர் பதவியாற்றிய திருவாளர் I.P. துரைரத்தினம் அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர், அப்பாடசாலையின் அதிபராகக் கடமை ஏற்ற திரு. கே. கிருஷ்ணபிள்ளை காலத்திலே இக்கல்லூரியின் கல்லூரிக் கீதம் தமிழில் எழுதப்பட்டு இசைக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது ஆஸ்திரேலியாவில் வாழ்கின்ற பிரபல கவிஞர் அம்பி என அழைக்கப்படும் திரு அம்பிகைபாகனால் அது யாக்கப்பட்டது.

ஸ்கந்தவரோதயாவின் 'கல்லூரிக் கீதம்' அப்பாடசாலையில் கல்வி கற்பித்த வித்துவான் ஆறுமுகம் அவர்களால் இயற்றப்பட்டது. பெரும்பாலான பாடசாலைகளில் 1950 களின் முற்பகுதியிலேயே விசேட தினங்களிலே கல்லூரிக் கீதங்கள் இசைக்கத் தொடங்கி விட்டனர். கல்லூரிக் கீதங்கள் தனியார் பாடசாலைகளில் நிறுவியர் புகழைப்பாடுவனவாக அமைந்தன. ஆனால் என்னைப் பொறுத்த மட்டிலே என்னை மிகவும் கவர்ந்த கல்லூரிக் கீதம் இராமநாதன் கல்லூரியினது என்றே கருதுவேன். என்னுடன் தொடர்புள்ள நான்கு கல்லூரிகளினதும் கல்லூரிக் கீதங்கள் எனது அபிமனத்துக்குரியவை என்றாலும் எனது உள்ளத்தில் ஒரு அபிமானத்தைப் பெற்ற கல்லூரிக் கீதம் இராமநாதன் கல்லூரியினது எனக் கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இராமநாதன் கல்லூரியினது கல்லூரிக் கீதம் அமரர் சு. நடேசபிள்ளை அவர்களால் யாக்கப்பட்டது. அவர் அற்புதத் திறமையுடைய தமிழறிஞர். அவரது அரசியல் கொள்கையில் முரண்பட்டவர்கள் இருக்கலாம். ஆனால் அவரது தமிழ்ப் புலமை, பேச்சாற்றல், இசை அறிவு பற்றி இரண்டு வேறான கருத்து இருப்பதற்கு நியாயம் இல்லை. வெண்பாவிற்குப் புகழேந்தி என்பார்கள். அவர் நள-தமயந்தி சரித்திரத்தினை வெண்பாவினால் சொன்னமையால். அதே போன்று காளிதாசனுடைய அமர காவியமான சகுந்தலையினை வெண்பாவினால் சொன்ன சு. நடேசபிள்ளையினது தமிழ், வடமொழி அறிவு வியக்கவைக்கிறது.

இராமநாதன் கல்லூரியின் கீதம் பத்து வெவ்வேறு இராகங்களில் அமைந்தது. அங்கே இலங்கை, மற்றும் யாழ்ப்பாணம் பற்றிப் பாடுவதுடன் இராமநாதன் புகழோடு பாடசாலையில் கற்பிக்கப்படும் அத்தனை பாடநெறிகள் பற்றியும் மிகப் பாங்கான அழகுடன் எடுத்தியம்பப்படுகிறது.

அரசாங்கப் பாடசாலைகளில் கல்லூரிக் கீதங்களில் எதனைச் சொல்வதாம்? ஆகவே அரசாங்கப் பாடசாலைகள் பலவற்றிலே கல்லூரிக் கீதங்கள் மிகவும் காலம் தாழ்த்தியே யாக்கப்பட்டன. அதில் ஏழாலை மகாவித்தியாலயமும் ஒன்று. அங்கு நான் பதவி ஏற்றது மே மாதத்தில்.

பொதுவாகவே ஜுன், ஜுலை மாதங்களில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் யாவற்றிலும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதுண்டு. அதற்கான ஆயத்தங்களைத் திரு கந்தசாமி செய்தார். அவர் அப்பாடசாலையில் பல பொறுப்புக்களைத் திறம்படச் செய்து வந்தவர். ஆகவே அவருடன் நான் கல்லூரிக் கீதம் ஒன்றினை ஆக்க வேண்டும். அது விளையாட்டுப் போட்டியின் போது இசைக்கப்பட வேண்டும் என்ற கருத்தினையும் தெரிவித்தேன். அவர் அந்த வார இறுதியில் நேரம் செலவழித்து நல்லதொரு கீதத்தினை ஆக்கிக் கொண்டு வந்து காண்பித்தார். அதனை நான் வேறு சில ஆசிரியர்களுக்கும் பிரதம பகுதித் தலைமை ஆசிரியருக்கும் காண்பித்த பொழுது அவர்கள் அதனை ஏற்கலாம் என்ற கருத்தினைத் தெரிவித்தனர். ஆகவே திரு கந்தசாமி அவர்கள் இந்தப் பாடசாலையின் சில மாணவ மாணவியரைத் தேர்ந்தெடுத்து பயிற்சி கொடுத்தார். விளையாட்டுப் போட்டியின் போது கீதம் அங்குரார்ப்பணமாகியது.

(அடுத்த இதழுடன் ஏழாலையிலிருந்து இறங்கிவிடுவேன். பின்னர் புத்தூருக்குப் பிரயாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற**

**சிவா
கணபதிப்பிள்ளை**

**அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca

# அருமையான இரவுத் தூக்கத்துக்கு என்ன செய்யலாம்?

ஏழு அல்லது எட்டு மணி நேர தூக்கத்திற்கான இரகசியம் என்ன? பிற்குறிப்பிட்ட பத்து உணவுகளில் ஒன்று அல்லது இரண்டினை உண்பதன் மூலம் பெறலாம். இவை இறுக்கமடைந்துள்ள தசைகளை தளர்வடையச் செய்யும், மனதை அமைதிப்படுத்தும், தூக்கத்திற்கான ஹோர்மோன்களான செறொரனின், மெலறொனின் களை சுரக்க வைக்கும்.

நல்ல உறக்கத்திற்கு உதவி செய்யும் பத்து உணவுகள்.

1. வாழைப்பழம் - செறொரனின், மெலறொனின் சுரப்பை ஊக்குவிப்பதுடன், தசைகளை ஆறுதல் படுத்தும் மக்னீசியத்தை கொண்டிருக்கிறது.

2. Chamomile tea - அமைதியற்ற மனம்/உடம்பினை சாந்தப்படுத்தும்.

3. இளஞ் சூடான பால் - Tryptophan புரதத்தினை கொண்டுள்ளது. இது சாதுவான மயக்க/மந்த நிலையை கொடுக்கும். பாலிலுள்ள கல்சியமும் இதனை மூளை பாவிப்பதற்கு உதவி செய்யும்.

4. தேன் - சிறிதளவினை பாலில் அல்லது தேநீரில் கலந்து பருகலாம். அதிகளவில் பாவிப்பின் உற்சாகத்தினைக் கொடுத்துவிடும். சிறிதளவு குளுக்கோஸ், அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட செய்திக் கடத்தியான Orexin வேலை செய்வதை நிறுத்தும்.

5. உருளைக் கிழங்கு - சிறிய அவித்த உருளைக் கிழங்கு, நித்திரை வரப்பண்ணும் tryptophan உடன் தொடர்பு கொள்ளும் அமிலங்களை அகற்றுவதன் மூலம் நித்திரைக்கு உதவி செய்யும். சிறிதளவு பாலும் இதனுடன் சேர்க்கலாம்.

6. ஓற் மீல் (Oatmeal) - மெலறொனின் ஹோர்மோனை ஊக்குவிப்பது, நித்திரைக்கு அருமையான உணவு.

7. அல்மண்ட்ஸ் (Almonds) - இருதயத்திற்கு நல்ல அல்மண்ட் பருப்புகள், tryptophan, மக்னீசியம் கொண்டது.

8. Flaxseeds - நல்ல மனநிலை ஊக்கி. Omega-3 இனைக் கொண்டது.

9. முழுத் தானிய பாண் (Whole-wheat bread) - இன்சுலினை சுரக்க வைப்பதன் மூலம், tryptophan மூளையை அடைய உதவும்.

10. வான்கோழி (Turkey) - Tryptophan இற்கு பெயர் போனது.

# மருந்துக் குளிசைகளுடன் பழரசங்கள் வேண்டாம்

காலையில் கிரேப் பழரசம் அருந்துவது உயிர்ச்சத்து 'C' இனைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு சிறந்த வழியாகக் காணப்பட்டாலும், சிலருக்கு பாதிப்பினையும் உண்டாக்கும்.

உயிராபத்தான கான்சர், இருதய நோய்கள் உட்பட, நோயாளர்கள் தமது மருந்துடன் கிரேப் பழரசம் அருந்தும்போது, உடலினால் மருந்தினை உறிஞ்சும் தன்மை குறிப்பிட்டளவு குறைவதாக ஆராய்ச்சியில் கண்டுள்ளனர்.

வெஸ்ரன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தமது அண்மைய ஆராய்ச்சியின் மூலம் அன்ரிஹிஸ்ரமினை கிரேப் பழரசத்துடன் சேர்த்து அருந்துகையில், ஒப்பீட்டளவில் தண்ணீருடன் அருந்தும் போது உறிஞ்சப்படுவதிலும் பார்க்க பாதியளவே உடலில் சேருவதை அவதானித்துள்ளனர்.

கிரேப் பழரசத்தில் காணப்படும் ஒரு வகைப் பதார்த்தம், குறிப்பிட்ட மருந்துகள் உறிஞ்சப்படுவதை தடுக்கின்றது. இதைப் போன்ற பதார்த்தம் அப்பிள், ஓரேஞ் பழரசங்களிலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

நோயாளர்கள் தமது வைத்தியரிடமோ, மருந்தாளரிடமோ மருந்துகளை கிரேப் பழரசத்துடனோ அல்லது மற்றைய பழங்கள், பழரசங்களுடன் சேர்த்து அருந்துவது பற்றி ஆலோசித்தல் மிகவும் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

BRACE FOR A GREAT SMILE

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

DR. ILLANGO & ASSOCIATES

## DR. M. ILLANGO

B.D.S. Dip.Orth (Oslo).General Practioner Mainly Orthodontics
கிளிப் போடும் வேலை

## DR. MEHRAN MOJGANI

D.D.S. Dip. Perio.Gum Specialist
பல்முரசு வைத்திய நிபுணர்

## DR. SABAPATHY RAVEENDRAN

B.D.S.M.S.F.D.SR.C.S (Eng). General Practioner (Mainly Oral Surgery)
(அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்)

## DR. ALI ADIPBFAR


D.D.S.M.D.F.R.C.D (C). Plastic Surgeon
(Wisdom tooth extraction under sedation)
மயக்கமாக்கி ஞானப்பற்கள் அகற்றுபவர்

## DR. JANAKI ILLANGO


B.D.S. குடும்ப பல் வைத்தியர்

## Dr. LAI YUNG CHEONG

B.D.S. குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**





**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**


628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds

**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**

**416 321 6420**





- **Vertical blinds**
- **Venetian blinds**
- **Draperies**
- **Curtains**
- **Shutters**

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
த ந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org